நீலாவணன்

# வழி

10




T. KALAMANY
MANI MALIHAI
ALVAI SOUTH
ALVAI

அன்பளிப்பு

திரு த. கலாமணி

அவர்களுக்கு.

—திருமதி நீலாவணன்



31-6-1931 — 11-1-1975

# நீலாவணன்

# வழி

T. KALAMANY
MANI MALIHAI
ALVAI SOUTH
ALVAI

முதற் பதிப்பு: மே, 1976.

வெளியீடும் உரிமையும் : திருமதி, நீலாவணன்,
பெரிய நீலாவணை, கல்முனை,

அட்டை அமைப்பு: எஸ். கே. சௌந்தரராஜன் (சௌ)

அச்சு : றெயின்போ பிரிண்டர்ஸ்,
231, ஆதிரிப் பள்ளித் தெரு, கொழும்பு-13.

விலை : ரூபா, [redacted]. 7.00

**NĪLĀVANAN VAZI**
(Collction of Poems)

Author : Nīlāvanan

Publisher : Mrs. NĪLĀVANAN,
Vēlānmai, Periya Nīlāvanai, Kalmunai

First Edition : 1st May, 1976.

Cover : S. K. Sountharajan (Sou)

Price. **Rs.** [redacted]. 7.00

# பதிப்புரை

எனது கணவர் காலமாவதற்குச் சில மாதங்களின் முன் தமது கவிதைத் தொகுதி ஒன்றை வெளியிட வேண்டும் என்ற எண்ணத்துடன் 'வழி' என்ற தலைப்பின் கீழ் சில கவிதைகளைத் தொகுத்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால் அந்த எண்ணம் நிறை வேறு முன் அவரை மரணம் தழுவிக் கொண்டுவிட்டது. இப்போது, அவரே தனது கைப்படத் தொகுத்த அதே கவிதைகளின் தொகுதியை மாற்றங்கள் எதுவும் இன்றி நூல் உருவில் வெளியிடுகின்றேன்.

இக் கவிதைத் தொகுதியில் 1955க்கும் 1972க்கும் இடைப்பட்ட காலத்தில் எனது கணவரால் எழுதப்பட்ட பல நூற்றுக் கணக்கான கவிதைகளில் 55 தனிக் கவிதைகளும் 'வழி' என்ற தலைப்பின் கீழ் உள்ள நெடுங் கவி ஒன்றும் இடம் பெற்றுள்ளன. இத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் 'மட்டக்களப்பு மாநகர்' என்ற கவிதை தவிர்ந்த ஏனையவை ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் இலக்கிய ஏடுகளிலும் வெளிவந்தவை. அவற்றுள் சில கலைமகள், தீபம் ஆகிய தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டவை. பொங்கல், காதல், ஒளித்திருநாள், தங்கப் பதக்கம், பாவம் வாத்தியார், போக்கு முதலிய கவிதைகள் மேடை, வானொலிக் கவியரங்குகளிலும் பாடப்பட்டவை. தமிழ்க் கவிதையின் மரபுணர்த்தும் வழி என்ற நெடும் கவிதை தினகரன் பரிசோதனைக் களத்திற்காக எழுதப்பட்டது. இக் கவிதைகளை அவ்வப் போது வெளியிடக் காலாயிருந்தவர்களுக்கு மறைந்த என் கணவரின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இத் தொகுப்பில் உள்ள சில கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமானதன் பின்னர் எனது கணவரால் சிற்சில திருத்தங்களுக்கு ஆளாகி உள்ளன. அவை திருத்தப்பட்ட இறுதிவடிவிலேயே இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கவிதைகள் அனைத்தும் எழுதப்பட்ட சரியான திகதி தெரியவில்லை; அதனால் பிரசுரமான திகதிகளை மாத்திரம்

ஒவ்வொரு கவிதையின் அடியிலும் கொடுத்துள்ளேன். பனித்துளி, வென்றுவா ஆகிய கவிதைகள் பிரசுரமான திகதிகள் சரியாகத் தெரியவில்லை.

இந்நூலை வெளியிடுவதற்கு எனக்குப் பல வகையிலும் உதவி செய்த வாசகர் சங்கத்தினருக்கு குறிப்பாக இந்நூல் வெளிவருவதற்கு அயராது உழைத்த மருதூர்க்கொத்தன் அவர்களுக்கும் சண்முகம் சிவலிங்கம், மு. சடாட்சரன், மருதூர்க்கனி, க. இரத்தினவேல், எம். ஏ. நுஃமான், அன்பு முகையதீன், பஸீல்காரியப்பர் ஆகியோருக்கும், டாக்டர் எம். முருகேசபிள்ளை அவர்களுக்கும், நிதி உதவி புரிந்த இனிய இலக்கிய நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள். குறுகிய காலத்தில் இத்தொகுப்புக்கு முன்னுரை ஒன்று எழுதி உதவிய திரு. ஏ. ஜே. கனகரத்தின அவர்களும் அழகிய முறையில் அட்டை வரைந்து உதவிய ஓவியர் 'சௌ' அவர்களும் என் நன்றிக்கு உரியவர்கள்.

**திருமதி. நீலாவணன்**

'வேளாண்மை' பெரிய நீலாவணை,
கல்முனை. 1-5-1976.

# முன்னுரை

நெருங்கிய நண்பனின் படைப்புக்களைப் பற்றி எழுதுவது கடினம். எம்மை அறியாமலேயே எமது மதிப்பீடுகளைப் பாசம் கோணச் செய்யும். மேலும் அந் நண்பன் இறந்த பின்பு அவரது படைப்புக் களை எடை போடுவது என்றால் மேற்குறிப்பிட்ட ஆபத்து இரண்டு மடங்காகிவிடும்.

ஆதலால் நண்பன் நீலாவணனின் கவிதைகளை எடைபோடும் வேலையை விமர்சகனுக்கே விட்டு விடுகின்றேன்; விமர்சகன் இலட்சிய வாசகன் என்ற அடிப்படையில்.

கவிஞன் என்றால் நிலா, மின்னல், மழை, வசந்தம், சூரியோதயம் போன்றவற்றைப் பாட வேண்டும் என்ற மரபுண்டு. இது தமிழுக்குப் பிரத்தியேகமானதன்று. ஏறக்குறைய எல்லா நாடுகளின் பண்டைய இலக்கியங்களிலும் இப் பண்பினை நாம் காணலாம். இயற்கைக்கும் மனி தனுக்குமிடையே மேற்கத்திய நாடுகளிலே ஏற் பட்டுள்ள பெரும் இடைவெளியின் காரணமாக-இதற்கான காரணங்களை நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை - இப்பண்பு மேல் நாட்டுக் கவி தையில் பெரிதும் அருகி விட்டது. ஆனால், நற் பேறாக எமது பண்பாட்டிலே மனிதனுக்கும் இயற்கைக்குமிடையே இன்னும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. ஆதலால் எமது கவிஞர் கள் இன்றும் இயற்கையைப் பாடுவது வெறும் இலக்கியச் சம்பிரதாயம் மட்டுமல்ல. ஆனால், இவ்வாறு பாடுகையில் சில கவிஞர்கள் வெறும் சொற் சக்கைகளை எம்முன் வைக்கின்றனர் என்பது உண்மையே.

நீலாவணனே இப்போக்கிற்குப் புறநடையா னவர். பிறவிக்கவிஞனாகிய அவர் இயற்கை வளம் கொழிக்கும் கிழக்கு மாகாணத்திலே பிறந் ததினால் இயற்கையின் அழகில் லயித்து அதனைப் பாடியதில் வியப்பில்லை. மற்றக் கவிஞர்களின் கைகளிலே பட்டு நைந்து போன பொருள்களுக்கு அவர் புதுமெருகூட்டி புத்துணர்வோடு அவற் றைப் பாடினார். ''வசந்தம்'' இதற்கு நல்ல எடுத்துக் காட்டு.

கவிதைக்கு உருவகமொழி இன்றியமை யாதது. அதிலிருந்து தான் கவிதை தனது சக்தி யைப் பெரும்பாலும் பெறுகின்றது நீலாவணன் உவமான உவமேயங்களை ஆள்வதில் கைதேர்ந் தவர். அவருடைய பெரும்பாலான கவிதைகளிலே இச்சிறப்பினைக் காணலாம்.

இதனைக் குறிப்பிடும்போது ஆங்கிலக் கவிஞ ரும் விமர்சகருமான கோல்ட்றிஜ் என்பவர் புனை விற்கும் (Fancy) கற்பனைக்குமிடையே (Imagination) வேறுபாடு கண்டமை நினைவிற்கு வருகின்றது. புனைவு, இயல்பாக தொடர்புகள் அற்றவைகளை தற்செயல் பொருத்தம் காரணமாக வலிந்து இணைக்கின்ற தென்றும், கற்பனை பொருட்களை உருமாற்றி அவற்றினைப் புதிதாக படைக்கின்றது என்றும் அவர் மொழிந்தார். நீலாவணனின் உவமான உவமேயங்களை எடைபோட விழையும் வாசகன் இவ்வேறுபாட்டினை மனதிற் கொள்வது நன்று.

கோல்ட்றிஜ்சைக் குறிப்பிட்டதும் நீலா வணனின் ''முருங்கைக்காய்'' ஞாபகத்திற்கு வரு கின்றது. எத்தனையோ நாட்களுக்குப் பின்பு கவிஞ ருக்கு கவிதை சுரக்கின்றது. அதை எழுத முனை யும்போது முருங்கைக்காயினைப் பிடுங்கித் தரு மாறு மனைவி கூப்பிடவே அதற்கிசைந்து கவிஞர் முருங்கையில் ஏற அதுமுறிந்து அவர் கீழே விழு கின்றார். ''அந்தோ! வந்த அருங்கவி இந்த அமளிகண் டெங்கோ மறைந்ததே'' என்று நகைச் சுவையுடன் நீலாவணன் கவிதையை முடிக்கின்றார். இதை ஒத்த சம்பவம் கோல்ட்றிஜ்சிற்கும் நிகழ்ந்தது அபினை உண்ட நிலையில் கோல்ட்றிஜ் 'குப்பிளா கான்' என்னும் கவிதையை எழுதத் தொடங்கினார். ஒரு சில வரிகள் எழுதி முடித்ததும் அவரைக்காண யாரோ வந்ததினால் (The man from Porlock) கோல்ட்றிஜ் எழுதியதை அப்படியே நிறுத்திவிட்டு அவருடன் உரையாடச் சென்றார். உரையாடல் முடிந்து திரும்பி வந்த அவருக்கு ஒரு வரிகூட மேலும் ஓட வில்லை. அரைகுறை யாகவே இன்றும் அக்கவிதை இருக்கின்றது.

இத்தொகுப்பிலேயுள்ள எல்லாக் கவிதைகளை யும் ஊன்றிப் படிப்பதற்கு போதிய அவகாசம் இல்லாததினால் அவற்றினை விரிவாகவோ ஆழ

மாகவோ நான் ஆராய முற்படவில்லை. மேலெழுந்த வாரியாக நோக்கும் போதே அவருடைய கவிதைகள் பல்சுவை உணர்வு வீச்சினைக் கொண்டுள்ளன என்பதை உணரலாம். தனது கவிதை என்ற யாழிலே ''..................உன்னைத் தேடித் தேடி ஆழிக்கரையில் ஒரு பெண் வாடுகிறாள்'' என்பது போன்ற சோக இசையை மட்டும் அவர் மீட்டவில்லை. ''பாவம் வாத்தியார்'' போன்ற கவிதைகளிலே சிந்திக்கத் தூண்டும் நையாண்டித் தொனியை அவர் நுட்பமாக எழுப்புகின்றார்

நீலாவணனின் இன்னொரு சிறப்பு பல்வேறு கவிதை நடைகளை லாகவமாகக் கையாண்டமை. சங்க காலக் கவிதை நடையை நினைவூட்டும் கவிதை நடையினைக் கையாள வல்லவராகத் திகழ்ந்த அவர், அதே சமயம் இன்றைய பேச்சு மொழியையும் சரளமாகவும் பயன் முனைப்பாகவும் ஆண்டார்.

''கவிஞன் மனிதர்களோடு உரையாடுபவன்'' என ஆங்கிலக் கவிஞன் வேட்ஸ்வேர்த் வரைவிலக்கணம் வகுத்தான் ''இந்த உலகில் இருந்த சில நாழிகையில்...'' என தொடங்கி... ''பின் இயற்கை யொடும் சாவியலை எள்ளிச் சிரி'' என அவர் முடித்திருக்கும் 'துயில்' என்ற நெஞ்சை அள்ளும் கவிதை வேட்ஸ் வேர்த்தின் கூற்றினையே எனக்கு நினைவூட்டுகிறது.

இத்தொகுப்பினை முழு மொத்தமாக நோக்கும் போது, நுண்ணுணர்வு படைத்த ஒரு கவிதா உள்ளம், சமுதாயத்தில் புரையோடியிருக்கும் கீழ்மைகளைக் கண்டு தாங்காது வெகுண்டெழுந்த ஓர் உள்ளம், தனது தனித்துவமான பார்வையையும் ஆற்றல்களையும் பூரணப்படுத்து முன் எம்மை விட்டு ''சாவியலை எள்ளிச்சிரி'' என்று பாடிய வாறு பிரிந்துவிட்டது என்ற எண்ணமே இதயத்தில் கனத்து நிற்கின்றது. எனினும், அவர் எமக்கு விட்டுச் சென்றிருக்கும் படைப்புக்கள் 'நீலாவணனின் கவிதா உடம்பு வாழும்' என்ற ஆறுதலை உறுதியாக அளிக்கின்றன.

எ. ஜே. க

41, 3ம்- குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 19-4-76

# கவிதைகள்

அழகுநிலா வாழ்க 9, பிறப்பு 10,
மின்னல் 12, மழை பொழிந்தது 13.
மட்டக்களப்பு மாநகர் 14, காக்கைகள் 15,
பாய்விரித்து வையுங்கள் 17,
பொன்னி வயற்புறம் போவதேன் 19,
கதிர் பொறுக்குகிருள் 21, பொங்கல் 22,
வசந்தம் 25, குமையும் குயில் 27,
போகின்றேன் என்ருே சொன்னுய் 28,

காதல் 30, வெறிக்குது 33, வேனில் 34,
அத்தான் 35, ஓயுமோ பித்தம் 36,
வழி தெரியேன் 37, தயவு செய்து சிரியாதே 38,
இரவு வருகின்றது 39, துயில் வரவில்லை 40,
கொஞ்ச வந்தான் 41, ஓவியம் ஒன்று 42,
ஏது காதல் 44, போகவிடு 46,

எனது இலட்சியம் 47,
அடுத்தொரு முறை சந்திப்போம் 49,
ஒளித் திருநாள் 51, தங்கப் பதக்கம் 54,
தந்தி ஒன்று 59, இன்றுனக்கும் சம்பளமா 61,
விடிகிறதா பொழுது 63, பனித் துளி 64,
அவர் வாழ்க 65, வென்றுவா 66,
கடவுளே 68, பாவம் வாத்தியார் 70,

பயண காவியம் 75, கடிதத்தை கிழிக்காதே 78,
முடிவில் ஒரு நாள் 79, முருங்கைக்காய் 80,
தீ 81, உறவு 83, தொண்டு 86,
அடிசடையா 88, பசையற்ற மண் 90,
பனிப் பாலை 93, சுமை 96,
வில்லன்கள் 97, சுவடு 99, போக்கு 101,
தென்பொடு நட 108,
விடை தாருங்கள் 109, துயில் 111, வழி 115.

# அழகு நிலா வாழ்க!

அழகு நிலா வாழ்க! — நெஞ்சை
அள்ளும் நிலா வாழ்க!

இளமை என்ற ஒளியி னூல்என்
இதயம் வென்ற பருவ மங்கை
பழகு கின்ற பொழுது தந்த
பழர சத்தின் குளிர்மை மிஞ்ச —
அழகுநிலா வாழ்க! — நெஞ்சை
அள்ளும்நிலா வாழ்க!

எழில் மயிலே ஆடு! — தோகை
இள மயிலே ஆடு!

தோகை யென்ற திரையின் மீது
தொக்கு வைத்து மரக தத்தை,
வாகை மன்னர் முன்னர் ஆடும்
வனிதை யென்ன அழகு மின்ன —
எழில்மயிலே ஆடு! — தோகை
இளமயிலே ஆடு!

தென்றலேநீ வீசு; — சோலைத்
தென்றலேநீ வீசு!

ஊடி நின்ற கணிகை மாதர்
ஒப்ப நின்ற பூக்கு லத்தைக்
கூடி வந்து காதல் வாழ்வு
குலவு கின்ற உலகில் நின்று —
தென்றலேநீ வீசு! — சோலைத்
தென்றலேநீ வீசு!

மாங்குயிலே பாடு! — தளிராம்
மதுவையுண்டு பாடு!

மழலை மைந்தர் குழலை யாழை
மலரின் வண்டின் இனிய ஓசைக்
கழகக மாகும் குரலி னூல்என்
கவிதை நெஞ்சம் உருகி வார —
மாங்குயிலே பாடு! — தளிராம்
மதுவை யுண்டு பாடு!

*1962*

# பிறப்பு

பச்சைப் பசுந்தமிழில் பாடுவதும் நம்குழவி
கொச்சை மழலே குழைவதினும் பிச்சையிட்டு
ஆண்டான் அடிமையினே அட்டியின்றித் திட்டுதலும்
வேண்டும்! தமிழாயின் வேண்டுமடா!
கூண்டினிலே
பொல்லாச் சிறுத்தை பொறைஇழந்து சீறிடவும்
இல்லே; அதற்கிவ் இனியகுரல் இல்லே இல்லே!
ஆரோ ஒரு பெண்! அவளுக்கிந் நேரத்தே
நேராக் குறையென்ன நேர்ந்ததுவோ?
போராட்டம்
தான்! எனினும் அன்னுள் தமிழில் அழுகின்ருள்!

ஏன் என் றறிதல் இழுக்கல; என் மான்பிணித்த
கையை விலக்கி இரு காதுகளேத் தீட்டிவிட்டுப்
பைய எழுந்து பலகணியின் மெய்தழுவி
நின்றேன்;
அதுபொழுது நீல நெடுவானில்
நின்ற இளநிலவும் நீந்தியெங்கோ சென்றிருந்தான்

தோய்ந்த இருளின் தொலேவில் நடப்பதனே
ஆய்ந்தறியக் கண்களினுல் ஆகவிலேத்
தேய்ந்த ஒலி
விக்கல், முனகல், விதியென்ற கூப்பாடெத்
''திக்''கென்ன யானும் திரும்பிடவும் பக்கத்தே
பல்லென்று வெண்சம்பாப் பாற்சோ(று) அடுக்கியவள்
சொல்கின்ருள்; தாய்மை சுரப்பெடுக்க!

''வல்,விரைவில்
பெண்மைச் சிகரத்தின் பேருக ஓர் அழகின்
கண்மணியைச், செய்ய கதிர்மகனேத் தன்மடியில்
தாங்கக் கடல் அன்னே தன்னே மறந்தங்கு

ஏங்குவதும் உங்கட் கினிப்பாமோ?
நாங்களுண்டு!
அப்பால் நகர்ந்திடுக; ஆண்குலமே! நும்செயலே
இப்பாவை சோகம்! இனிமேலும் எப்படியும்
வாழ்க உமக்கிங்கு வாய்ந்த நலம் யாவும்!

கீழ்வானில் மேகக் கிழியலினுள் தாழ்வில்
பவள மணியென்னப் பாலன் ஒருவன்
அவதரிக்கப் போகின்ருன் ஆமாம்!
அவதிகண்டு
வாயின் கழிவிரக்க வாந்தியினுல் தாயடைந்த
நோயின் கொடுமை நொடிந்திடுமோ?
போயிடுக!
கண்டால் உமைத்தாய்மை கண்ணீர் பெருக்கிடுவாள்!
கொண்டாட வாம்அக் குழவிவந்த பின்பாடு''

என்றென்னைஎள்ளி இதழ்க்கடையிற் பூத்தநகை
கொன்ருள்!
முகமதியம் குங்குமமாய்த் தின்றதெனை
அக்கணத்தே கொம்பிருந்த ஆண்கோழி ஒன்றெழுந்து
''கொக்கரக்கோ'' என்றேதோ கூவிற்றே
செக்கர்வான்
கம்பளத்துட் பிள்ளைக் கனியமுதம் சிந்திற்றே!

நம்பினுல் நம்புங்கள் நம்மூரின்
கம்பனுக்கும்
ஆகாதே அந்தஅழகை வியந்துரைக்க!
பாகாய் உருகிற்றென் பாவுள்ளம்
ஆஹா — ஹா!
விண்ணேடு மண்ஆன விரிகதிரை ஈன்ற
பெண்ணுல் உலகெய்தும் பேறு!

*1960*

# மின்னல்

கண்ணைத் தின்னும் மின்னல்! — நெஞ்சைக்
கருக்கி உருக்கும் மின்னல்!
மண்ணை யறைந்து குதித்தே — பாம்பாய்
மடியும் நெளியும் மின்னல்!

சளசள எனமழை
பொழிகிற பொழுதினில்
ஒழுகிற குடிசையில்
உழல்கிற வறியவர்...

கண்ணைத் தின்னும் மின்னல் — நெஞ்சைக்
கருக்கி உருக்கும் மின்னல்!

கயமைகள், கசடுகள்
கதியென அலைகிற
கயவரை இறையவர்
கடிகிற நகைபுரை

கண்ணைத் தின்னும் மின்னல் — நெஞ்சைக்
கருக்கி உருக்கும் மின்னல்!

அருள்தவிர் கொடியவர்,
அடிமன இருளிடை
அறிவெனும் ஒருகசை
அடிவிழல் எனவதோ...

கண்ணைத் தின்னும் மின்னல் — நெஞ்சைக்
கருக்கி உருக்கும் மின்னல்!
விண்ணில் தங்க நதியாய்ப் — பாய்ந்து
விரையும்; மறையும் மின்னல்!

*1965*

# மழை பொழிந்தது

மழை பொழிந்தது; மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங் கசிந்தது!
மலையிருந்து பல் நதி விரைந்திட,
மரஞ்செடி கொடி மகிழ்ந்து கும்பிட

மழை பொழிந்தது; மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங் கசிந்தது!

கருணை வானக் கரம் வழங்கிய
கனிந்த நாவற் பழஞ் சொரிந்தென,
பரந்த பூமிச் சருகதிர்ந்திடப்
படபடபட சடசடவென...
மழை பொழிந்தது; மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங் கசிந்தது!

தாளங் கொட்டித், தவளைத் தட்டார்
தங்க மின்கொடித் தாலி செய்திட,
ஆழமான குளம் வழிந்திட,
அடியடியென விடியவிடிய...
மழை பொழிந்தது; மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங் கசிந்தது!

கலையிழந்து தம் கணவர் நெஞ்சிடை
காதல் வஞ்சியர் கூதல் அஞ்சிட,
மலை பிளந்தென இடிமுழங்கிட,
மை யிருளிடை மொய்யெனப் பெரு...
மழை பொழிந்தது; மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங்கசிந்தது!

இடரெனும் புவிக் கடலில்; உண்மை யென்
இரவி யள்ளிய கருமுகில் மனத்
திடைப் புகுந் துணர் வுறுத்த, செந்தமிழ்
உடைப் பெடுத்தொரு படைப் புதித்தென
மழை பொழிந்தது: மழை பொழிந்தது!
மண் மடந்தையின் மனங் கசிந்தது! **1966**

# மட்டக்களப்பு மாநகர்

இலங்கையின் திருமுகம், இலட்சியத் தமிழகம்
எழில்தவழ் மட்டு மாநகர் வாழ்க!

வளம்பல கொழிக்கும் வாவியில், மீன்கள்
முழங்கிடும் இசையும் தமிழும் வாழ்க!

விபுலா னந்தன் வழங்கிய யாழாய்
விளங்கிடும் வங்கக் கடலொடும், வாவி
நவரச ஏழிசை நரம்பெனப் பொருந்தும்!
நாளும் உதயச் செங்கதிர் வணங்கும்! . . .
இலங்கையின் திருமுகம்...

வயல்களில் பொலிமலை! ஆழியில் மீன்கள்!
வளர்செழுந் தெங்கும் உதிர்வதுந் தங்கம்!
அயல்விருந் தோம்பும் அன்பினில் அன்னை!
அரைசியல் பல்கலை அறிஞர்க்கும் அம்மை!...
இலங்கையின் திருமுகம்...

சோதிடம், மருந்து, மந்திரம், கூத்து,
சுவைக்கவி, வசந்தன் குரவையும் ஏத்தும்,
சாதிகள் நான்கும் தம்மதம் காத்து,
சமத்துவம் கண்ட தாயகம் வாழ்க!...
இலங்கையின் திருமுகம்...

*1972*

## காக்கைகள்

காக்கைநாம்; கரிய காக்கைகள் பெரிய
நோக்கமற்ற சிறு காக்கைகள்! - கருங்காக்கைகள்!

கறுப்புத் துணியைக் கட்டி
அரு வருக்கத் தகுந்த தெங்கள்
இறக்கையென் றுணர்த்தியும்
எட்டத் துரத்திவிடும்
விருப்பத்தில் சிலர்செய்யும்
விஷமத் தனத்துக்கும்
இரங்குவோம்! உணவருந்துவோம்;
பின் பறந்துபோம்...

காக்கைநாம்; கரிய காக்கைகள் பெரிய
நோக்கமற்ற சிறு காக்கைகள்! - கருங்காக்கைகள்!

உலகத்தின் அழுக்குண்டெம்
உடல்கொண்ட ஊத்தையை
அலசி அலசி நன்கு
கழுவிக் குளித்த பின்னர்
அலகில் உணவுகொண்டுள்
அறையுள் புகுந்துமக்கள்
அணைப்பினில், அன்பின் பிணைப்பினில்
இன்பம் சுகித்திடும்...

காக்கைநாம்; கரிய காக்கைகள் பெரிய
நோக்கமற்ற சிறு காக்கைகள்! - கருங்காக்கைகள்!

அழுக்கைத்தவிர வையத்
தழகை விழுங்குதற்குப்
பழக்கப் படாதவர் ஐயநாம்; அதற்காக
இழக்கமாய்ப் பழித்தெம்மை
ஏசித் துரத்தல்விட்டு
வழங்குவீர்!
அன்பை! விளங்குவீர்!
நன்றி மறந்திடாக்...

காக்கைநாம்; கரிய காக்கைகள் பெரிய
நோக்கமற்ற சிறு காக்கைகள் - கருங்காக்கைகள்

உணவிட்டு எமையிட்டும்
உருகி இரங்குகிற
மனிதத்தின் உயரிய
குணம்பற்றிப், பயன்பற்றி
மனமொத்தெம் இனமொன்றி
மகிழ்ச்சிக் கவியிசைத்தல்
இன ஒற்று மைக்குமட்டும் இலை,
அன்பின் நினைவுக்கும்...

காக்கைநாம்; கரியகாக்கைகள் பெரிய
நோக்கமற்ற சிறுகாக்கைகள் - கருங்காக்கைகள்!

*1965*

# பாய்விரித்து வையுங்கள்

பறையின்மகள் தூங்குகிற
அறைக்கதவை நள்ளிரவில்
பதுங்கிச் சென்று
குறைமதியால் மதுவெறியால்
தட்டுகிற கோமான்காள்
கொஞ்சம் நில்லீர்!
நிறையுடையாள் பொன்றாத
கற்பென்னும் நிதியுடையாள்
நெஞ்சை ஈர்த்தால்
முறையாக மணப்பதிலே
வசையென்ன? ஏறிடுமோ
முதுகில் மேளம்!

முடிச்சவிழ்க்கப் போம்பொழுதும்
முதலாளி போலுடலை
முறையாய் மூடி
நடித்துலகை ஏய்ப்பதற்கும்
நாகரிக உடைவேண்டும்!
அவற்றைக் கல்லில்
அடித்தும்மை அழகுசெய்யும்
அந்த ''வண்ணத்'' தோழனுங்கள்
அருகில் வந்தால்
துடிக்கின்றீர் ஏனையா?
சொல்லுங்கள் தொங்கிடுமா
தோளில் மூட்டை!

குரங்குக்கும் உங்களுக்கும்
கொஞ்சமெனும் உறவில்லை?
குறித்துக் காட்ட
சிரங்கொட்டும் நும்தலையில்
சீழ்கொட்டும் போதுமதைச்
சிங்கா ரிக்க

கரந்தொட்டே கத்தியினுல்
''கருக்'' கென்று மயிர்சீவிக்
காட்டு வாழ்வுக்(கு)
இரங்குகின்ற ''அம்''பட்டன்
ஈனனென்று செப்புகிறீர்
இதுவோ நீதி?

களிப்புக்கும் உள்ளாழ்ந்த
கவலேக்கும் மருந்தென்று
கலத்தை நீட்டி
புளிப்புக்கும் இனிப்புக்கும்
போராட்டம் போடுகிறீர்
பொழுது பட்டால்!
சுளிக்கின்றீர் ஏதேதோ
சுடுசொற்கள் வீசுகிறீர்
சொந்த நண்பன்
குளிக்கவரின் பொதுக்கிணற்றில்
''பள்''ளென்று கூவுவதோ
கொடுமை ராசா!

கோயிலேயும் ஹோட்டலேயும்
''கொள்கையெனப் பேசிடுவோர்
கூடிச் சென்று
வாயிலினேத் திறப்பதினுல்
வந்திடுமோ ஒன்றுகுலம்?
வளர்ந்து விட்ட
நோயிதனே நொருக்கிவிட
நோக்குடையீர் எனிலுங்கள்
நொண்டி நெஞ்சில்
பாய்விரித்து வையுங்கள்
பகுத்தறிவு நல்லெண்ணம்
படுத்துத் தூங்க!

*1959*

# பொன்னி வயற்புறம் போவதேன்

கன்னி எழிலொடு தன்னந் தனிமையிற்
பொன்னி வயற்புறம் போவதேன்? — எங்கள்
பொன்னி வயற்புறம் போவதேன்? — அவள்

கண்ணை இமைப்பது கண்டு குளத்திடை
காவி மலர்க்குலம் சாவதேன் — அந்தக்
காவி மலர்க்குலம் சாவதேன்!

நஞ்சை விளைப்பவன்
நாட்டின் பெருந் திரு
நெஞ்சை அரிந்து துண்
டாடவோ! — கொண்டு
கஞ்சி கொடுத்தபின்
காற்றை மறித்தவர்
கொஞ்சி மகிழ்ந்து கொண்
டாடவோ?.................. கன்னி......

முற்றி விளைந்த நெல்
பற்றைக்கு நாணத்தை
கற்றுக் கொடுத்தபின்
மீளவோ? — கரு
விற்புரு வத்தினில்
அற்புதம் செய்தவன்
அன்பு மனத்தினை
ஆளவோ..................? கன்னி......

இப்படிச் சூட்டை
இயற்றுக என்றிரு
செப்பு முலைகளைக்
காட்டவோ! — இல்லை
''எப்படி என்முகம்?''
என்றுசெந் தாமரைக்
குப்பையை அங்கிருந்
தோட்டவோ?.................? கன்னி......

உச்சி வெயிலினைத்
துச்சமென் றெண்ணி
உழைத்த வரைப் புயம்
சாயவோ? — காதல்
இச்சை எழுப்பி
இதழ்க்கடை ஊறிய
இன்ப அமுதினை
ஈயவோ..................? கன்னி......

*1959*

# கதிர் பொறுக்குகின்ருள்

கதிர் பொறுக்குகின்ருள்—வயல்
காட்டிலே குனிந்து வள்ளி
கதிர் பொறுக்கு கின்ருள்!

விதிர் விதிர்க்க வெயிலில் நின்று
விளே முடிக்கு முழவர் கண்டு
சதிரெனக் களிக்க நன்று
சாய்ந்து சாய்ந்து முன் நடந்து...

கதிர் பொறுக்குகின்ருள்—வள்ளி
கதிர் பொறுக்குகின்ருள்!

புல்லுறுத்து பாதமோ, வெண்
புருவின் கால் எனச் சிவந்து,
நெல் சுமக்கு முழவர் நெஞ்சில்
நினேவு கோடி நிறைய நின்று......

கதிர் பொறுக்குகின்ருள்.. வள்ளி
கதிர் பொறுக்குகின்ருள்!

சூடிரண்டையே சுமந்து
தூரெனும் இடை துவண்டு
ஆடுகின்ற தோகை கண்டு
அஞ்சி யோட அதனே வென்று.........

கதிர் பொறுக்குகின்ருள்...வயல்
காட்டிலே குனிந்து வள்ளி
கதிர் பொறுக்குகின்ருள்!

*1967*

# பொங்கல்

பச்சைக் களிமண் கொணர்ந்து
பிசைந்து பதப்படுத்தி
அச்சிற் பதித்தது போல்நீவீர்
செய்த அடுப்பினிலே
'அச்சா' எனஉங்கள் அத்தான்கள்
மெச்சி அகப்பையிலும்
மிச்சம் விடாது சுவைக்கும்
நறும்பொங்கல் மெத்தவுமே...

உண்டு வயிற்றை ஒருசாண்
உயரத்திற்(கு) ஊதுவித்து
கண்டூர் மயக்கம்; கவிதையின்
இன்னொலி காதுபட
சண்டாள நித்திரை சார்ந்தாலும்
சாரும்! சரிசரிஎன்
பெண்டாட்டி வைத்த பெரும்பொங்கல்
பெற்றியைப் பேசுவமே

மண்ணிற் கிடந்து முழுமதி
ஒன்றெம் மனைக்குள்எழும்
இந்நேரம் மட்டும் இணைந்து
கிடந்த இவள்துயிலும்
எந்நேர மோபிரித் தேகி,
இடைக்கிடை எய்தியங்கு
கண்சாடை ஒன்றில் கருத்தைப்
புதைத்துக் களிக்கையிலே

ஆற்றில்என் அன்னம் இறங்க
அதுகண்ட அல்லியின்தாள்
தோற்றேம் இவள்தன் துடியிடைக்
கென்று துவண்டுவிழ
நேற்று வரையில் நிகழாத
விந்தை நிகழ்ந்த தென்று
ஆற்றாத செந்தா மரைப் பெண்ணை
வண்டுவந்(து) ஆற்றிடுமே.

ஆற்று மணலில் அடிமிதிப்
பாள்அதை அங்குநிற்கும்
நூற்றுக் கதிகம் வயதாம்
மருத நுனிக்கிளையில்
வீற்றிருக் கின்றஅக் கிள்ளைகள்
கண்டு விஷமம்எங்கள்
தோற்றத்தை இந்தச் சிறுக்கிதன்
காலில் துவைப்பதென்றே—

சண்டைக் கிழுக்க இவளும்தன்
மூக்கால் சமாளிக்கலாம்
வெண்டைக்காய் போன்ற
விரலேன் இதற்கு? வெடிகள் எங்கும்
சண்டித் தனமே புரியும்
இதென்ன சபையறியாப்
பன்றிக் குலமோ சரிஒரு
நாள்தான் பறையட்டுமே.

கோலத்தின் நாப்பண் குடம்;
அதன்மேலே குவிந்திருந்தால்
பாலூறு தெங்கின் பழந்தான்;
அதிலெங்கள் பாவையர்கள்
மேலாடை மீறி மிதக்கும்
இளமுலை மேன்மை, யதன்
பாலேது? மேலே பகர்தல்
முழுதும் பழங்கதையே.

பாலுக்கும் இவள் பல்லுக்கும் முனம்
பகையோ தொடர் பழியோ?
வேலுக்கும் நெடு வாளுக்கும் அதன்
நினைவிற் பயம் இலையோ?
மேலுக்கும் இனும் மேலுக்கும் எழ
வெறியோ? குரல் எரியோ?
ஆளுக் இனி அடிதான் விழும்
அதனால் அவள் பிழையோ?

உழுபவர் மனதினில் கதிரது அசைகையில்
குதியொடு மகிழ்வது வழியும்
உலகினில் உறுபசி விலகியே சிறுமைகள்
விடியலில் பனியென ஒழியும்
கலைமதி சிதறியே கனலிடை வழிகையில்
கதிரவன் முகஎழில் பொலியும்
பிழையிலை ஒருதினம் தொழுதிடல் முறையிதை
பெரியவர் மனமிதை அறியும்.

உழுபவர் குருதியில் பெயர்வது வியர்வெனும்
அரிசியின் அவியலாம் குழைவே!
அழுவதும் இலையினி; அருணனின் அருளிது
அதுவுமெம் நிலமகள் விளைவே
பலபல என அதோ விடியுது பறவைகள்
பகர்வதும் பகலவன் துதியே!
அழகிது; கவிதையும் முடியுது துயில்பவர்
அவசர மிலையினி எழுமே!

*1962*

# வசந்தம்

பச்சையான இலைகளில் பொன்முலாம்
பாவ,ஊரின் பசும்புல் வெளியெலாம்,
பச்சைப் பாலகன் போலப், பகற்பயல்
பாய்ந்த வெண்பனிப் பந்தடித் தென்னுடை
குச்சியுள்ளும் குறும்பு புரிந்தனன்.
கோபித் தென்பயன் இந்தப் பழங்கிழம்!
'அச்சடா' வென அந்தக் குறும்பனின்
அதர மீதிலோர் முத்தம் அளிக்கிறேன்.

சன்னலைத் திறந்தேன்; நெடுங்காலமாய்ச்
சாவை வெல்லத் தொடரும் நெடுவழி
அன்னச் சாலை யருகொடும் வேலிமேல்
அந்த ரத்தினில், தந்தி சொல் கம்பிகள்
தொன்மை வாய்ந்ததோர் பட்டினம் நோக்கியே
தொடுக்கப் பட்டுள தாம்அவை! என்கிறார்!
என்னவோ இன்பப் போதையிக் காலையில்!
எங்கிருந்திப் புதூஒளி பொங்குது!

வம்மி தோறும் வயிரம் வயங்குது
வாகைக் கொம்பரில் மாணிக்கக் கொந்துகள்;
செம்மை முள்முருங் கீன்ற பவழங்கள்!
செல்வ மாங்கிளை முத்தம் சொரிந்திடும்.
எம்மருங்கு திரும்பினும் பச்சையில்
இடையிடை எழில் புன்னகைத் தேமலர்,
அம்மம் மா!என்ன அற்புதம்! ஊரெலாம்,
அழகி யுன்றன் திருமணப் பந்தல்கள்!

பந்தல் தோறும், குயில்வித்து வான்களின்
பண்த தும்புசங் கீத விருந்துகள்!
குந்திக் காக்கை குரவை யிடும்;மரங்
கொத்தி, தாளங்கள் கொட்டிக் குதிக்கிருர்!
வந்து சேர்ந்தனர் நாட்டியத் தோகையர்;
வயல் அரங்குதொ றும்புது நாட்டியம்!
இந்த வையம் அனைத்தும் இருந்துன
தினிய நண்பர்கள் யாவரும் வந்தனர்.

வேனிலே,மண வேளை நெருங்குது;
வேதியர் அணில், வேதம் மொழிகிருர்
கானி லெங்குமுன் காதலை வாழ்த்தியே
கவிதை பாடுகின்ருர் கவிவாணர்கள்!
வானில், வண்ண இறக்கை புனைந்ததோ
வந்து கொண்டிருக் கின்றனர் காதலர்!
ஏனடீஇவ் வவசரம்...! நாங்களும்
இருக்க... நாணமில் லாது சிரிக்கிருய்!

*1965*

# குமையும் குயில்

தோடம் பழச்சுளைபோல் தொங்கும் நிலவொளியில்,
ஆட வருவாயென்று, ஆற்ருேரம்
ஓடத்தே
நான்காத் திருந்தேன் நடுச்சாம மாமட்டும்;
ஏன்காக்க வைத்தாய் எனை?

எண்ணத்தில் எல்லாம் எலுமிச்சைப் பூச்சிரிப்பே;
கண்ணிறையக் காணுவதுன் கட்டழகே;
எண்ணில்லா
வெள்ளிகளின் மத்தியிலே, வீற்றிருக்கும் வெண்ணிலவை
எள்ளி நகைக்கும்எழில்.

வெண்டா மரைக்குள்ளே வீழ்ந்துருளும் நீலநிற
வண்டாய், விழியாலிவ் வானத்தைக்
கண்டாலே
என்னை நினைக்கா திருக்க இசைவாயோ?
என்னே இதயம் இரும்பு!

தக்காளிக் கன்னங்கள் மிக்க சிவப்பேறப்
பக்கத் திருந்திசைநீ பாடுங்கால் ...
துக்கமுற்று
சித்தம் குழம்பிச் செயலிழந்து, மாமரத்தின்
கொத்துள் குமையும் குயில்!

*1963*

# போகின்றேன் என்றோ சொன்னாய்?

மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி
இன்னும் தேயவில்லை—இளம்
தென்னையின் ஓலை பண்ணிய இன்பப்
பாட்டுகள் ஓயவில்லை
என்கடை வாயில் உன்னிதழ் ஊட்டிய
ஈரம் காயவில்லை—எழில்
மின்னிடும் என்றன் மென்முலை தானும்
பின்னே சாயவில்லை!

குறுமணல் மீது கொண்டல் தவழ்ந்த
சுவடும் மாறவில்லை—அங்கு
புறவுகள் வந்து குறுநடை கொண்டு
கோலம் கீறவில்லை
இரவின் 'அம்மிக் குருவி'கள் இன்னும்
இல்லம் சேரவில்லை - என்னை
இடைவெளி யின்றி இறுக அணைத்த
இதமும் தூரவில்லை!

பருவப் பெண்ணும் இரவுக்
கன்னி தவறிப் பெற்றபயல் - அந்தப்
பரிதிக் குஞ்சைக் ககனத் தெருவின்
முடிவில் போட, அவன்
உருவப் பொலிவின் உதயத் தொளியில்
உறவை வெட்டுகிறாய்—பொல்லா
உதிரக் கடலின் நடுவில் படகில்
நடையைக் கட்டுகிறாய்!

''விண்ணின் தாரை எண்ணிப் பொழுதை
வீணுக் கிடவல்ல—அணு
விஞ்ஞா னிகள்போல் மண்மேல் உயிர்கள்
நீருக் கிடவல்ல!
உண்ணீர் என்றே மீன்கொடு வந்திவ்
வுண்ணு உலகத்தின்—பசி
ஓட்டப் போகின் றேனென் ருேசொன்
ஞய்''என் உயிரத்தான்!

வேம்புக் குமரி தென்றல் காற்றின்
வெறியைச் சாடுகிருள்-அந்த
வீம்புக் காரன் விரகப் பேயோ
டவளைக் கூடுகிருன்!
தேம்பிக் கொண்டே ஆடையை அள்ளி
மார்பை மூடுகிருள்—உன்னைத்
தேடித் தேடி ஆழிக் கரையில்
ஒருபெண் வாடுகிருள்!

*1961*

# காதல்

இளமையெனும் அகல் விளக்கில் இனியகனு
எனுமுயர்ந்த எண்ணெய் வார்த்து
பழமையெனும் திரியிட்டு பயனூறும்
கற்பனையில் படிய வைத்தேன்
அழகென்னும் பொருளனைத்தும் அன்பென்னும்
சோதிகலந் தன்பு செய்யும்
எழில் வாழ்வு காண்பதற்கே எண்ணியெண்ணி
ஏங்குகிறேன் எந்த நாளும்!

இருளென்ற கரும்பேடு இரவெல்லாம்
அடைகாத்து ஈன்ற குஞ்சாம்
இரவியெழும் காட்சியிலே என்னிதயம்
பறிகொடுத்து எட்டாவானில்
மருவியவன் தவழ்கையிலே மணித்தேரை
பார்ப்பது போல் மாலை மட்டும்
உருகி நின்றேன்! அவனோ என் உளத்திலெழும்
அன்பலையை உணர்ந்தானில்லை!

காலையிளம் கதிர் கண்டு காத்துவைத்த
நாணமெலாம் காற்றில் விட்டுச்
சோலையிலே சிரித்த புது மலரழகில்
உள்ளமெலாம் சொக்கி நின்றேன்!
சேலையெனும் இதழுரிந்து சிறைவண்டு
நறையுண்டு சென்ற பின்னர்
மாலையிலே மடிந்தனவல் லாலெனது
மனமறிந்து பழகக் காணேன்!

பனிமழையின் சிறுதுளிகள் படஉலகம்
மிகக் களிக்கப் பசும்பொன் பந்தாய்
இனிமை நிலா முழுமைநிலா எழுந்ததடா
என்னுளத்தில், இன்பம் பொங்கி
கனியவரும் அதனுருவில் களங்கமிக
இருந்தாலும் காதலித் தேன்!
அநியாயம்! என்னுடனே அன்புசெய
நிலவுக்கு அறிவே இல்லை!

தூசியின்றித் தெளிந் தோடும் துறையினிலே
நான்மூழ்கத் தொட்ட தேதோ!
பாசியென நினைத்ததனைப் பறித்தெறிய
கையாலே பற்றினேனு?
கூசியங்கு எதிர்த் துறையில் குளித்த இளங்
குமரி எந்தன் கூந்தல் என்ருள்!
ஆசையொடும் நான் பார்த்தேன் அவளுமெனை
நோக்கி நகை அரும்ப நின்ருள்!

காற்றிடையில் குடமேந்திக் கனியிதழில்
கள்ளேந்திக் கண்கள் என்று
கூற்றிரண்டை ஏந்தியிளங் கொங்கையென
நுங்கிரண்டைக் கொடியில் ஏந்தி
ஆற்ருேடும் அலைந்தென்னை அணைந்த கருங்
குழலாட அழகுத் திங்கள்
தோற்ருேடும் வதனத்தில் தொடர்ந்தோடும்
நகையோடும் தோன்றி ஞளே......

கண்ணிமைத்தேன் தலைகவிழ்ந்தாள் 'கனஅழகு
நீ' என்றேன் கண்ணிரண்டை
மண்ணிடையே புதைத்துவிட்டு மலர்ப்பதத்தால்
தேடுகிருள் மாயக்காரி!
எண்ணமினி நீயென்றேன்; எனதுயிர் நீர்
என்வாழ்வில் சோதி யூட்டும்
வண்ண விளக்கெனச் செவியில் வார்த்துவிட்டாள்
அமுதத்தை வாழ்க; வாழ்க!

இன்பத்தீ பாவளிநாள் இன்றெனது
வாழ்வினிலே இனிய நன்நாள்!
அன்புத்தீ பரவியிந்த அகிலமெலாம்
மகிழ்வெய்தும் அருமை நாளே!
என் வாழ்வின் சோதியினை ஏற்றிவைத்தாய்
இதற்காக எழு பிறப்பும்
உன்திரு நாள் கொண்டாடி உளமுருகிப்
பாடிடுவேன் உண்மையீது!

அன்பெனுமச் செழுங்கழனி அதில்முளைத்த
ஒருகவிதை அழகு கண்டீர்!
துன்பமெலாம் துடைத்தன்புச் சோதியிலே
கலக்கவென்று துடிக்கும் எந்தன்
நண்பர்களே! கேட்டீரா நானுரைத்த
இவைகளிலே நயமிருப்பின்
என்வாழ்வின் சோதியினை எதுவென்று
நீரறிவீர்! எதற்கு மேலும்?

*1962*

# வெறிக்குது

தங்க நிலாவான் தவழ்ந்து வருகுது—அதில்
தாவியே ஏறிட ஆசை பெருகுது!
மங்கை உன் அன்பிலென் மனம் உருகுது—தீயில்
மாந்தளிர் போலவே உடல் கருகுது!

முல்லையில் வண்டினம் மொய்த்துக் கிடக்குது—அந்த
மோகக்கிறுக்கிலே ராகம் பிறக்குது!
கொல்லையில் குளிர் தென்றல் நடக்குது—அடி
கோதை உனைக் கொஞ்ச உள்ளந் துடிக்குது

'அத்தான்' என்றொரு தத்தை அழைக்குது-'வா
அன்பே' என்றதன் சோடி அணைக்குது!
ஒத்திய முத்தமோ பித்தம் விளைக்குது—பாவி!
உன்நினை வாற்செயல் யாவும் பிழைக்குது

நுரைக்கனி யின்விதை நுங்கிற் சுழலுது—அந்த
நோக்கிலே என்நெஞ்சு நோயில் உழலுது!
வரைக்குமேல் அதோ மதியம் தெரியுது—நீ
வராதி ருந்திடில் தேகம் எரியுது!

வில்வக் கனிவந்துன் நெஞ்சில் இருந்தது- விழி
வேல்பட்ட புண்ணுக்கு வேண்டும் மருந்தது!
புல்லி அணைத்திடில் மார்பின் விருந்தது—அதை
பூங்கொடி போல் இடைதாங்கி வருந்துது!

வன்ன இதழ் எனதெண்ணம் பறிக்குது—அனல்
வாகை மலரதன் வண்ணம் குறிக்குது
கன்னலின் சாறென இனிமை செறிக்குது—பழங்
கள்ளை அருந்திய தென்ன வெறிக்குது!

1955

# வேனில்

ஆண்டில் ஒருமுறை எம் மாண்ட பிதிர்கடனை
வேண்ட வரும் குருக்கள் போலே—கிளை
நீண்டு வளர்ந்து பச்சை பூண்டு புதுத்தளிர்கள்
தோன்றும் மரங்களுக்கு மேலே—உயர்
பாண்டி மதுரைநகர் தோண்டி எடுத்த தமிழ்
ஈண்டு குயிலிசைக்கும், தேனே!—அது
தீண்ட எனதுளமும் தாண்டும் கவலைகளை;
மீண்டும் கவிதைவெறி யானேன்!

முள்ளு முருக்கில் எரி கொள்ளி நெருப்புதிர்ந்து
தள்ளி கிடக்குமோர்மாந் தோப்பை வான்
வெள்ளி குலைகுலையாய் அள்ளி எறிந்தது போல்
கொள்ளை கொளுத்துது மத் தாப்பை!
புள்ளும் குருவிகளும் உள்ளம் கனிந்து காதல்
வெள்ளம் தனில் குடைந்தே ஆடும்!—புதுக்
கள்ளில் எழும் "தெறி"போல் துள்ளும் சுவைக்கவிதை
சொல்லி வசந்த மிதைப் பாடும்!

செல்வம் படைத்தவர்க்கே ஒல்கும் பணிவிதென்று
நெல்லின் கதிர்கள்தலை தாழ்த்தும்—மிக
மெல்ல நடந்துவரும் செல்வக் குழந்தை இளம்
தென்றல் அவைநிலத்தில் வீழ்த்தும்!—சுவை
வெல்லத் தமிழ் கதைத்து செல்லும் கிளிக்குலமும்
வேனில் விளங்கவென வாழ்த்தும்—இதை
நல்லகவிதை யொன்று சொல்லும் படிக்கெனை எந்
நாளும் கனவிடையே ஆழ்த்தும்!

சன்னல் அருகுநின்று என்னே அழகிதென்று
கண்ணைப் பிசைந்து கொண்டு பார்த்தால்—இவள்
என்னோ டெழுந்துவந்தென் முன்னால் அணைந்து நின்று
தன்மேல் எனதுடலைப் போர்த்தாள்—எழில்
மின்னும் வசந்தமன்பு பண்ண இயற்கை தந்த
வன்னப் பொழு தெனவே சாய்ந்தாள்—அவள்
கன்னம் சிவக்க இதழ் தன்னைப் பதிக்கையிலே
விண் ஏன் இடையில்வந்து பாய்ந்தாள்?

*1962*

# அத்தான்

பொலியும் கலைமதியின் பொருமல் தனையறியார்
நலியும் மதிஒளியில் நலமே தடிகண்டார்?
எலியின் உருவதிலும் எழில்காண் பவர்விழிகள்
மெலியும் நமதுடலை மேவா ததுமேனோ?

வாடும் கரமென்றே வளைசெய் ஒலிகேளா
தோடும் முகிலிடையே ஒழுகுங் கவியெனவே
தேடும் அவர்விழிகள்! தெரியா நமதுருவம்!
கூடும் தினமெண்ணிக் குலையா திருமனமே!

கோவைக் கனிதன்னைக் கொத்தும் கிளிகண்டே
நாவை நதியாக்கி நாவாய் விடுகின்றார்!
காவிற் கலைமானிற் காணும் நவமிந்தப்
பாவைக் கிலையென்றோ பாரா முகமானார்?

கடல்நா டிடுநதியின் கதையைக் கவிசெய்வார்
உடலோ டுயிர்மாய உளமே யவர்நினைவாய்
மடல்காய்ந் திடுதாழை மலரா யொருமங்கை
நடமா டுவதறியார் நமனா யினரவரே!

கண்ணிற் கருவண்டைக் காணார் மலர்மதுவை
உண்ணும் அவைகண்டால் உளமீந் திடுகின்றார்
எண்ணச் சுடுகாட்டில் எய்தும் சுகமிந்தப்
பெண்ணுக் கிலையென்றோ பேசாச் சிலையானார்!

கொத்தாய் மலர்சூடிக் குறையா அழகோடு
நித்தம் அவர்நினைவாய் நிற்கும் நமைவிட்டே
கத்தும் குயிலிசையிற் கவிதைக் கருதேடும்
அத்தா னொருபித்தன்! அழியா திருமனமே!

*1958*

# ஓயுமோ பித்தம்?

கொண்டல் கண்டதோ கோலமாமயில்
குன்றில் ஆடுது ஆட்டம்—பூங்
குயிலும் கூவு(ம்)மாந் தோட்டம்
வண்டு நேர் விழி வஞ்சிபார் உயர்
வானிலே மதிக் கோட்டம்!—அதன்
வதனமேன் சிறு வாட்டம்?

பண்டுநின் முகம் கண்டதாற் பகை
கொண்டதோ அது? அன்றி—பசி
கொண்டதோ உண வின்றி
விண்டு சொல்ல என் வெட்கமோ? செய
வேண்டுமோ சிறு நன்றி—மண்
வீழுமோ உருக் குன்றி?

விண் நிறைந்த கொண் மூ சிரித்திடு
வேளை தோன்றிடும் மின்னல்—இவ்
வேழை காணுமிடை உன்னில்
பண் நிறைந்திடு பைந்தமிழ்ச் சுவை
பாட்டது நறுங் கன்னல்—கரும்
பாம் பெனுங் குழற் பின்னல்!

கட்டவிழ்ந்த செம் மாதுளம் மலர்
காட்டுமே கனி வாயை—வெறி
மூட்டுதே; மனப் பேயை
வெட்டி வீழ்த்திடும் வீரமின்றியே
வேகுமே யுளம் நோயை—போக்க
வேண்டுவேன் கவித் தாயை

வாழையுள் மடல் போற் கதுப்புகள்
வழு வழுக்குதே; முத்தம்—சில
வைக்கில் ஓயுமோ பித்தம்
கோழைதன்னையும் வீரனுக்கிடும்
கோதையே யுனை நித்தம்—பெற
வாதை கொள்ளு மென் சித்தம்

*1958*

# வழிதெரியேன்

காணத் துடிக்குதத்தான் விழிகள்—அடர்
காடும் இருட்டும் நிறை வழிகள்
கோணல் எனினும் நான் வந்திடுவேன்—ஒரு
கோடி முத்தமெனில் தந்திடுவேன்!

வாடிக் கிடக்குதத்தான் செடிகள்—நீர்
வாய்க்கால் இருக்கவில்லை; நொடிகள்
ஓடிக் கழியுது வீணுக்குத்தான்!—இதில்
உலகின் பழியெல்லாம் ஆணுக்குத்தான்!

என்னை உனக்குக் கொடுத்த தென்றோ—எனை
ஏங்கித் தவிக்க விடுதல் நன்றோ?
முன்னைப் பழவினை யோ இதுவும்?—என்றன்
மூச்சைப் பிழிந்திடு மோ அதுவும்!

ஆடிக் களித்த அரங்கினிலே—குரங்கு,
ஆடிப் பழிக்கும்! மருங்கினிலே
வாடிக் கிடந்திடு வீர்; அறிவேன்!-ஓடி
வந்திட நான்ஓர் வழி தெரியேன்......

என்னைப் பழிசொல்ல ஏதுமில்லை! நம்
இருவர் மனத்திலும் பேதமில்லை
அன்னைச் சிறையினில் வாடுகிறேன்—வர
ஆயிரம் தந்திரம் தேடுகிறேன்!

பெற்றவர் வீட்டினில் காவல் வைத்தார்—இந்தப்
பேதை என் செய்திடலாம்?
கற்றவர் நீங்கள் கருத்து வைத்தால்—வழி
கண்டுநாம் உய்ந்திடலாம்!

காதலி மீதுமக் கார்வம் இருப்பின்—இக்
காவல் ஒரு பொருட்டா!
சாதலிலே மனச் சாந்தி கிடைத்திடில்
சந்திப்புத் தான் இருட்டா?

*1961*

# தயவு செய்து சிரியாதே

தளிருடலை நெளியாதே
தயவுசெய்து சிரியாதே,
மேலாடை
கிழியுமெனின் எறிவாய்,என்
ஹிருதயமும் அதுபோலா...?
நிமிராதே!
விழிகணையின் விசையினில் விண்
வெளியிலெனை எறியாதே!
மறுகாலும்...
தளிருடலை நெளியாதே
தயவு செய்து சிரியாதே!
உபகாரம்?

விரல் நுனிகள் சுவையாதே!
வெகுளி யெனக் குழையாதே!
புயலூடோர்
சிறுபடகை நுழையாதே!
சுழியில் விழ நகையாதே!
சுனையூறல்
பருகஎனை அழையாதே!
பகடிகளும் மொழியாதே!
விதியோடும்
பொருதஎனைப் பணியா தே!
பொறு... உயிரைத் திருகாதே!
உபகாரம்!

*1969*

# இரவு வருகின்றது

இரவு வருகின்றதே — இளைய
இரவு வருகின்றதே
உருவி உயிர் பருகும்
அரவம் என நெடிய
இரவு வருகின்றதே!

இமைகள் செயலொழிய
இதய அலைகள் எழ
சுமைகள் சுடுதுளியாய்
சொரிய... ஒரு... கரிய
இரவு வருகின்றதே — கரிய
இரவு வருகின்றதே.

முதலில் பலதடவை
முடுகி நுகர் சுவைகள்
எதனை நினைதல் — விடல்?
எதனை விலகுவது...?

பதுமை யெனவமரில்
படரும் கனவு — மனப்
புதரில்... புதிய தளிர்
விரியும்!... சருகுகளாய்
உதிர — உடல் குளிர
உதிரம் உறை கொடிய
இரவு வருகின்றதே நெடிய கரிய கொடிய
இரவு வருகின்றதே.

*1970*

# துயில் வரவில்லை

ஈரப் பனிக்காற்று, ஈரலைத் தீய்க்கிறது
தூரத்தில் எங்கோ தெருநாய் குரைக்கிறது
ஆரோ திருடன் அலையும் அரவமது?
ஊரோ இருட்டில் உலகை மறக்கிறது . . .
துயில் வரவில்லைத் துணை!

விட்டுப் பிரிந்துவிட்ட வெய்யவனுக் காக, விண்ணும்
சொட்டுச்சொட் டாகச் சுடுநீர் சுரக்கிறது;
பட்டுக்கும் மேல், ஓர் பனிப்போர்வை; அப் போர்வை
சுட்டுப் பொசுக்கிச் சுடலையிலே சேர்க்கிறது . . .
துயில் வரவில்லைத் துணை!

பக்கத்துச் சூழல் பகலைச் சபிக்கிறது
எக்காளம் கொட்டி இரவைச் சுகிக்கிறது!
அக்கினித் தீர்த்தத்துள் ஆத்மா குளிக்கிறது!
செக்கர் வான் காண்பதற்கே சிந்தை துடிக்கிறது . . .
துயில் வரவில்லைத் துணை!

சத்தியங்கள் காற்றில் சருகாய்ப் பறக்கிறது
வைத்த ஒரே நம்பிக்கை வாடி இறக்கிறது!
பித்தத்தைத் தேய்ந்தநிலா பீச்சி யடிக்கிறது;
சுத்தாங்க மான சுகமோ . . . . தொலைக்கிறது . . .
துயில்வர வில்லைத் துணை!

*1968*

# கொஞ்ச வந்தான்

கொஞ்ச வந்தான்; குனிந்தேன்; அஞ்சிக்
கொஞ்சம் பின்வாங்கி நின்ருன்

கொஞ்ச வந்தான் பிறகும் தடுத்தேன்விழி
கும்பிடவும்
கெஞ்சி நின்ருன்; பணிந்தான்; நகைத்தான்
சற்று கிட்டவந்தான்

கொஞ்சவந்தான்; குனியாது நின்றேன் அவன்
கொள்கை வென்ருன்!

மீட்டுகின்றேன், நின் இதயத்து வீணையை
மெல்ல மெல்ல
கேட்டு நின்ருன்; மறுத்தேன்; கடைக்
கண்களினுல் கிளறி
மீட்டும் வந்தான்; எனைப் பாட்டுரைத் தான்;

அவன் மென்மையிலே,
பூட்டவிழ்ந்தேன்; கரும் பூட்டிச்சென்ருன்,
பின்னர்
போய்த் துயின்றேன்.

*1968*

## ஓவியம் ஒன்று!

என்னடியைத் தொட்டெடுத்தான்;
தன்மடியில் இணைத்தான்;
இரவெல்லாம் விழிமழையின்
அருவியிலே நனைந்தான்!
கன்னமலர் கொண்டொற்றி
ஈரமெல்லாம் துடைத்தான்;
கனவின் இழை தனில்நினைவின்
சரமொன்று தொடுத்தான்!

தன்னிதழால் ஏந்தியதைச்
சூடிஇடை பறித்தான்;
தமிழ்க்கவியில் பிழிந்தெடுத்த
சுவைத்துளிகள் தெளித்தான்;
என்னசுகம் மெய்ம்மறந்தேன்
என்றாலும் மறுத்தேன்;
இரவுகுழல் நரைத்ததை
இருவருமே வெறுத்தோம்!

வானஅரை வட்டத்து
மையத்தின் முகட்டில்
வயங்குமதிக் கலசத்தில்
மதுரமதுத் தளும்பும்
மானமிழந்தான், மிகவும்
மாந்தியதில் புதைந்தான்!
மயங்கி,இசை நரம்புகளை
வருடிஎனைத் ததைந்தான்!

கானநதிச் சங்கமத்தில்
மீனெனவே குளித்தான்
கரங்களிலே அலையள்ளிப்
பெருந்தாகம் தணித்தான்!
நாணமெனும் செந்திரைக்குள்
நானொளிந்தேன்; விழித்தால் . . .
நாளொன்று புலர்ந்ததடி
நாமதனைச் சபித்தோம்!

சிப்பியொன்றைச் சிமிழாக்கி
முத்துகளை அரைத்தான்;
சிவப்புவண்ணக் குழம்புசெய்தான்;
தூரிகையைத் துவைத்தான்!
அப்பியப்பி அழித்தழித்து
அழுந்தஅதைப் பதித்தான்!
'அருமையிது' எனஅவனே
தனையிழந்து ரசித்தான்!

எப்படியான் இனியும்எனை
ஒளித்தல்தகும்? இசைந்தேன்!
இயன்றவரை உதவிபல
புரிந்தவனைப் புகழ்ந்தேன்!
அப்பொழுதும் புலர்ந்ததடி
நாமதனைத் துதித்தோம்;
அவன்படைத்த ஓவியத்தை
நயந்துமிகக் களித்தோம்!

*1968*

# ஏது காதல்

காதலா என் மீதிலா அடி
கன்னி இவ் வுல கத்திலே
ஏதடி அதை எங்கு கண்டனை
என்னடி உள றுகின்றனை?
காதலென்பது காவியங்களை
கனிய வைத் திடு கற்பனை
பேத முண்டடி கோடி யிங்கதில்
பேதை நீ யறி யாததோ?

அன்பினுற் பிணி பட்டவர் பலர்
ஆவியோ டிருந் துலகிலே
இன்ப வாழ்வினை எண்ணியேங்கியும்
என்னடி சுகம் எய்தினர்
துன்பமே அவர் தூய நெஞ்சினிற்
தோழ ஞகி யுறைந்தனன்
என்பு தானுமில் லாதழிந் தனர்
ஏது பாரினிற் காதலே?

சாதியென் றுளச் சாட்சி கொன்றிடும்
சமய மென்றிடுஞ் சதியினுல்;
நீதி கொன்றிடும் ஏழைஎன்பதால்;
நீசமே புரி நீள் புவி
ஆதிதொட் டிது தேதி மட்டுமிங்கு
ஆரை விட்டது வாழவே?
கோதிலா வொரு கோவை வாயினுய்
ஏது பாரினிற் காதலே?

சீதனத்தினுற் சீர்த்திறத்தினுற்
சீவனற்றிடுங் காதலைப்
பாத பூசைகள் பண்ணி என்னடி
பயன டைந்தனை? இலக்கியம்
ஓதலாம் ஒரு கோடி யுண்மைகள்
ஒப்புதற் கெவர் இங்குளார்
காதலோ வொரு காதலாம் அதைக்
கண்ட தெங்கெனக் களறடி!

நாடகத் தினில் நாவல் ஒற்றையில்
நளின மாஞ் சினி மாவிலே
நாடறிந் திட நன்கு போற்றுவர்;
நாகரீக மென் றேற்றுவர்
வீட டங்கவும் வந்ததா மெனில்
விந்தையாய் அதைத் தூற்றுவர்
ஏட டங்குமோ எழுதலா மெனில்
ஏது பாரினிற் காதலே?

***1957***

# போகவிடு

உறவுமுறை கூறியெனை வழிமறித்தாய்; நின்றேன்.
ஒருவருமில் லாமனையின் உள்ளறையுட் சென்றோம்.
பிறரெதையும் பிழையாயும் பேசிடுதல் கூடும்!
பெண்ணே, யான், பிறகொருகால் திரும்பிவரல் நேரும்!
பெறலரிய பேறென்று நின்னகத்து வாய்ந்த
பேரின்பக் கனிகளினைப் பிசைந்துபிசைந் துண்டே
இரவுமுழு வதுமினிய அமளிமிசை யாறி
இருள்பிரியு முன்னரெனை ஏகவிடு பெண்ணே!

இரவெல்லாம் நிலவாகி எம்மீது வாரும்.
இளந்தென்றல், இதமாயுன் இயல் ஏந்தி ஊரும்!
மரமெல்லாம் மலராகி மணமஞ்ச மாகும்!
மயல்கொண்டு கருவண்டு புதுராகம் ஊதும்!
அரவங்கள் யாவையுமோய்ந் தடங்கிவெகு நேரம்;
ஆயினும்...,மீள் வறியாத அன்புவலை வீழ்ந்த
புறவொன்று துணைதேடி இரவெல்லாம் ஏங்கும்!
புலர்கிறது பொழுதென்னைப் போகவிடு பெண்ணே!

பாலைவழிப் போகையிலுன் நினைவுகுடை யாகும்;
பரல்மலையின் பாதையிலே பஞ்சுமணை தூவும்!
வேலைவழிப் போகையிலுன் வேட்கையென தோடம்!
வெந்தழலில், உன்கருணை சந்தனத்தின் சாறு!
மாலைவழிச் செல்கையிலுன் மணிவிழியென் பேறு!
மாதரசி, நீயன்றி வேறுதுணை ஏது?
காலைமலர் பார்கடலில், கதிரென்ற பேரில்!
கதவையடை; கதவையடை! கதைகள்வரும் ஊரில்!

*1965*

# எனது இலட்சியம்

அந்திப் பொழுதில் ஒருநாள்
தனிமையில் ஆழியொடும்
விந்தைக் கதைகள் விளம்பித்
துயரை வெறுத் திருந்தேன்
வந்தாள் ஒருத்தி அவ்வாலைக்
குமரி வடிவழகில்
மொந்தைப் பழங்கள் அருந்திய
போதையும் மூண்டதுவே!

முற்றாத காதல் முறிந்து
சரிய முழுவுலகும்
பற்றுத் துறந்து பறக்க
நினைந்த பறவைஎனை
சிற்றிடை கட்டிச் சிரித்த
முகத்தொடு செங்கையினால்
வற்றாத இன்பம் தருவேன்
வருகென்று வாழ்த்தினளே!

நெஞ்சினில் 'கவிதை' சுடர்பாய்ச்சி
னாள் என் நிலையறியாப்
பிஞ்சுப் பருவத்திலே! அவள்
அன்பினைப் பின் தொடர்ந்து
கொஞ்சிக் களித்துக் குலையாத
இன்பக் கொடி பிடித்து
எஞ்சிக் கிடக்கின்ற நாளை
கழிப்ப(து) இலட்சியமே.

ஒன்ருகி உள்ளம் பலவாண்டு
காலம் உருண்டதினி
என்றேனும் நாங்கள் பிரியா
திருக்க இறை வணங்கிச்
சென்றே உலகைக் கருவாக்கி
நல்ல செந்தமிழில்
இன்பக் கவிதை பலசெய்து
வாழ்தல் இலட்சியமே.

வேண்டாம் கவிதை விருந்தென்று
கூறி விடமெனவே
'தீண்டா' இலக்கிய மாக்கிய
பித்தர் திருந்தியெனை
மாண்ட பிறகோர் சிலைசெய்து
மாலையை மாட்டுதலும்
வேண்டேன்! இலட்சியப் பாதையில்
யானும் விரைகுவனே.

*1959*

# அடுத்தொருமுறை சந்திப்போம்

பழகிமுன் அறியேன்; பார்த்தும்
பழகியோர் பகர்ந்தார்; நீ யோர்
அழகியல் அறிஞன் தேடும்
அற்புதக் கனவைக் காமன்,
முழுமை வெண்ணிலவின் சாறும்
மோகமும் கலந்து கூட்டி
எழுதிய ஒயிலாம்! கேட்டென்
இளமையின் திரும்பி, ஏங்கும்!

நடந்துநீ வந்தால் நெஞ்சில்
நடனங்கள் நடந்த தென்றார்!
தடமுலைக் குவியல் தோய்ந்த
தம்முடல், தங்க மென்றார்!
உடையற்ற இடையைக் கையுள்
ஒருமுறை எடுத்தால், தேர்மேல்
கிடந்தனம் என்றார்! பொந்தின்
கிளியென்றார்! கிறுகிறுத்தேன்!

முத்தங்கள் என்று, கொத்து
முந்திரிக் கனியின் சாற்றில்
தித்திக்க வடித்த, சொட்டும்
தெவிட்டாத மதுவை வாயில்
மொத்துமொத் தென்று மொத்தி
மோகத்துள் முழுகிப், பண்டைப்
பித்தங்கள் தெளியப் பெற்றுன்
பித்தராய் மாறி ஞராம்!

உலகத்தின் கருத்துப்போல், நான்
உடம்பினுல் கிழவன்; மேன்மை
உலகத்தின் உண்மைபோல், என்
உள்ளத்தால் இளைஞன்! கண்ணே...
கலகத்தை மூட்டு வானேன்...
காதிலே போட்டுக் கொள்க;
அழகிநீ; அன்பன் நான்; நம்
அன்பினை அறுப்பார் ஆரே?

அதற்கெலாம் அஞ்சேன்; எங்கள்
அறியாமை மிகுந்த ஊரின்
குதர்க்கத்தில் பிறந்த தாமோர்
கொள்கை: 'ஓர் பெண்ணே கொள்க,
அதற்குமேல் இல்லை' என்ற,
அதட்டலை அஞ்சு கின்றேன்!
இதையெலாம் உங்களூரில்
இயம்பினுல் நகைப்பார்... என்ன?

அழகியல் பற்றி ஏதும்
அறியாத அசடன், உன்னைப்
பழகிய புலவர் சொன்ன
பான்மையால் காதலித்தேன்!
உளமொன்றிக் களித்தோம்! ஏனும்...
ஊரொன்றி வாழ்தல் வேண்டும்!
அழகிய நங்கையே, நாம்
அடுத்தொரு முறை சந்திப்போம்.

*1966*

# ஒளித்திருநாள்

வானத்தின் தாரையெலாம் 'வந்ததுதீ
பாவளி—நாம்வாழோம்' என்றே
போனதுவும் தெரியாதோ? புவியெல்லாம்
ஒளிவெள்ளம் பொங்கி நிற்க,
சீனத்து வெடியுண்ட செருக்கினிலே
செந்தீயும் சிரித்தல் கேளா(து)
ஏனத்தான் இன்றேனும் இளங்காலை
நேரத்தில் எழுந்தால் என்ன?

ஆள் அரவம் அற்றதொரு அறையினிலே
அதிகாலை அந்நே ரத்தில்
யாழ் அரவம் கேட்டெழுந்து யாரென்றேன்
என் மனையாள் 'நான்தான்' என்றே
பாழை வெடித் ததுவென்னப் பல்வரிசை
காட்டிப்பின் பறந்து சென்று
சாளரத்தின் கதவுகளைத் திறந்திடலும்
ஒளிக்கதிர்கள் சார்ந்த தங்கே.

வாழ்வாரைப் பார்த்துமனம் வதைவார்போல்
அல்லிமலர் வதனம் வாட
தாழ்வுகண்டும் கலங்காத தன்மானத்
தமிழன்போல் தாமரைப் பெண்
கீழ்வானம் சிவக்கின்ற கிளுகிளுப்பில்
மெய்மறந்து கிறங்கி நிற்ப
ஆழ்கடலின் மீதொருவன் அழகாகத்
தவழ்கின்றான்; அருணன்! ஆமாம்!!

நேற்றெல்லாம் அடுப்படியில் நெய்யெல்லாம்
செலவழித்து நினைக்க நாவில்
ஊற்றெடுத்துப் பெருகவைத்தாள் உமிழ்நீரை;
ஒன்றேனும் ஈந்தாளில்லை!
பாற்கோவா, பலகாரம் பண்ணிவைத்தாள்
இன்றேனும் படைப்பா ளென்று
'ஆற்றுக்குப் போகஎண்ணெய் ஆயத்த
மோ?' என்றேன் 'ஆமாம்', என்றாள்.

சுருங்கிவிட்ட தோல்ஒழியச் சொல்சுருங்க
வில்லை. எமைச் சுட்டி ஆற்றில்
பெருங்கிழங்கள் இரண்டொருவர் பேத்தியார்
பேரழகுப் பேழை என்றோ
கருங்காலிக் கட்டழகன் தனக்கோ இக்
கடைந்தெடுத்த முதிரை? என்பார்
பெருங்கோபம் மூண்டாலும் பேசவொண்ணா
'தீவாளி' பிறகு பார்ப்போம்!

நீராடிக் கலைந்த இவள் நெடுங்கூந்தல்
வழியெல்லாம் நெருஞ்சி யோடு
போராடிக் கொய்துவரும் பொன்மலர்கள்
போதாதெம் பூசைக் கென்று
ஆராத காதலொடும் ஆதவன்தன்
அணைப்பினின்ற அம்புயங்கள்
வேரோடும் பறித்தெடுத்து வீடுவந்தோம்
விழா அமைக்க வேண்டாமா நாம்?

முத்திடித்த மாவெடுத்தாள் முற்றமெலாம்
கோலமிட்டாள், முடித்தாள்; வண்ணக்
குத்துவிளக் கேற்றிநிறை கும்பமொடு
கொய்தமலர் குவித்து வைத்தாள்
முத்தமிழின் நினைவோதான் மூன்றுகல்லை
அடுப்பாக மூட்டி அங்கு
வைத்தனள்தீ அதில்வகுப்பு வாதஇருள்
அரக்கனுயிர் வதைக என்றோ?

செந்நெல்லின் மணிஅரிசைச் செழும்பாலில்
இட்டதற்குள் சீனி யோடு
கன்னல்நறுங் கனிவகையும் கற்கண்டுப்
பாகுடனே கலந்து ஊற்றி
உண்ண உண்ணத் தெவிட்டாத ஒளித்திருநாள்ப்
பொங்கலிட்டோம் உணர்ச்சிப் பொங்கல்
தின்னுதற்கா ஆளில்லை? திரும்பிப்பார்
காக்கையண்ணர் திருக்கூட் டத்தை!

நரகனவன் காலத்தே நாமெல்லாம்
இருளாகி நாட்டில் வாழ்ந்தோம்
அரக்கனவன் இறந்தபின்பு அடடாநாம்
காக்கையினம் ஆனே மென்று
உருக்கமுடன் உரைசெய்த காக்கைகளுக்
குணவிட்டோம்; உண்டோம் ஒன்றாய்
இரக்கமுள்ள காக்கையினம் இனியதமிழ்
பாடிஎமை ஏத்திற் றம்மா!

செந்தூரப் பொட்டோடும் சீனத்தின்
பட்டோடும் சிலம்பு கொஞ்ச
எந்தனில்லாள் ஏந்திவந்தாள் இனிதான
பண்டங்கள் இருந்த தட்டை.
எந்தனுக்கோ வயிற்றிலிடம் இல்லைத்தான்
கடுகளவும்! என்றாலுந்தான்
இந்தத்தீ பாவளிதான் என்னாளும்
வந்திடுமா இறுக்கி வைப்போம்!

*1959*

## தங்கப் பதக்கம்

விடியப் புறமெழுந்து வீடொன்று தேடிப்
படியெல்லாம் ஏறிப் பகலை
முடிவாக்கி
மாலை மயங்க மனஞ்சோர்ந்து வீடுவந்தேன்
வேலையெலாம் இன்றைக்கு வீண்.

வீடு கிடைக்கா விசனத்தை விட்டொழித்து
ஏடு படித்திருந்தேன் என்னன்பன்
ஓடிவந்து
வானொலியிற் சொன்ன வளமார் தமிழ்ச்சேதி
தேனொழுகச் சொல்வான் திறந்து.

திங்கள்தொறும் கவிதைத் தேர்வு நடத்தி,வரும்
பொங்கற் புதுநாளிற் பொற்பதக்கம்
எங்களது
ஈழத்து வானொலியார் ஈவார்கள் நும்போன்றோர்
வாழ வகுத்த வழி

என்ற உரைகேட் டிதயத்தாற் பூரித்தேன்
நின்ற நினைவு நெடுநாளாய்
இன்றே
நிறைவுற்ற தென்று நெடுமூச் செறிந்து
அறையில் புகுந்தே னடா.

எழுதுந்தாள் பேனா இவற்றில் படிந்த
புழுதி முழுவதையும் போக்கி
எழுதவென்
நாற்காலி மீதினிலே நான்போய் அமர்ந்தக்கால்
ஏற்காதோ மூட்டை எனை.

புதையலாம் கவிதைவேண்டிப்
புதியகற்பனை மண்தோண்டி
எதையெதை யெல்லாங் கண்டேன்
என்னுயிரவளைக் காணேன்
சதையெலாம் வடிந்துகோலிற்
சாவினை நாடிச்சென்று
சிதையிலே எரியும்போது
செல்வமேன் கவிதைஏனோ?

நித்திரை என்னும்பொல்லா
நீலிசெய் கொடுமையோடு
ஒத்துழையாதாம் மையை
உதறுமிவ் வூற்றுப்பேனு
புத்தியிற் சிறிய அன்புப்
புதுமனையாட்டி தொல்லை
இத்தனை துயருக்கஞ்சி
எங்கவள் ஒளிந்துகொண்டாள்

மாலைநல் பணிபத்தாச்சு
மனைவியாள் ஓடிவந்தே
வேலைகள் என்னவேண்டும்
விடிந்திடப் போகுதின்னே
காலையிற் பார்த்துக் கொள்வீர்
கவிதையும் கதையுமென்று
சேலையை வரித்துக்கட்டிச்
சிந்தனைக் கூறுசெய்தாள்.

வந்தவர் வாயிற்கொள்ள
வாடல்வெற் றிலையுமில்லை
தந்தவர் கடனைக்கேட்டு
தரும்வசை மொழியோகொள்ளை
முந்தையர் தந்தசொத்தும்
முடிந்தது இனியுஞ்செய்யுட்
சிந்தனை வேண்டாம் சென்று
செய்தொழில் தேடுமென்றாள்.

காசுதான் வருமோவீணிற்
கவிதையென்றுயிரை மாய்த்தால்
வீசுநற் புகழால்வீட்டில்
வெறும்உலை சோறாகும் மோ
மாசுறும் இச்சொல்கேட்டு
மறைந்ததோ கவிதைஅந்தோ
தூசெனக் கிவைகள் யாவும்
தூக்கமேன் வந்தாய் சீபோ!

சின்னவள் எனினும் இல்லாள்
செப்பிய வார்த்தை யாவும்
உண்மையென் றுணர்வே னுயின்
உணர்விலே உயிர்பெற்றோங்கி
என்னிருதயத்தே ஊறும்
இன்தமிழ்க் கவிதை வெள்ளம்
தன்னுளே அடங்க ஏதும்
தந்திரம் கண்டேனில்லேன்.

கவிதைசெய் புலவர்சிந்தும்
கண்மழை கடலாய்மாறிப்
புவியெலாம் பரந்தவுண்மை
புல்லறிவாளர் காணுர்
செவியிலே பஞ்சு வைத்துச்
செந்தமிழ் காப்போமென்றே
நவிலுகின்ருரைக் கண்டால்
நகையலால் என்ன தோன்றும்?

ஏட்டினைப் புரட்டுந் தோறும்
எமனையே கண்டா ரொப்பப்
பாட்டினைக் கண்டு பக்கம்
பட்டெனத் தட்டுகின்ருர்
ஈட்டியால் துவக்கு வாளால்
ஈனமாம் கொலையின் சேதி
வீட்டிலே கொணர்ந்து காட்டி
விருப்புடன் விமர்சிக்கின்ருர்

என்றெலாம் எண்ணந் தோன்றி
எள்ளியே நகைக்கும் என்னை
ஒன்றுமே தோன்ரு வண்ணம்
ஓரிரு கணங்களோடிச்
சென்றன, கவிதை யொன்று
செய்திட ஆர்வம் இல்லை
நன்றெனத் தாளை மூடி
நடந்தனன் படுக்கை நாடி

வாராத உறக்கமதை வரவழைத்து வரவழைத்து
வாழ்வில் இன்னும்
தீராத கனவுகளைத் தீர்க்கவழி தெரியாதென்
சிந்தை யோடு
போராடிப் போராடிக் களைத்துவிட்டேன்
பொழுதின்னும் புலர வில்லை
ஆரோவென் நெஞ்சுதனிற் பூவெறிந்தா ரில்லை; அதென்
அகத்தாள் கைதான்!

நெஞ்சுதனில் விழுந்தமலர் தனையெடுத்தென்
நெடுமூச்சால் நீரு காமற்
கொஞ்சியபின் அடிகோதாய் நீயின்னும் உறங்காத
தென்ன வென்றேன்
விஞ்சுகின்ற உவகையினால் விருந்தொன்று வயிற்றிலென
விளக்க மாகக்
கொஞ்சமுயான் எதிர்பாரா வகையிதனை;
எடுத்துரைத்தாள் கோவை வாயால்

இளஞ்சேரன் உதரத்தே உதயஞ்செய் தானென்ற
இன்ப வார்த்தை
வளஞ்சேர்ந்த மட்டுநகர் வாவியிலே மீனிசைபோல்
வறுமைக் காதில்
நுழைந்ததுமே கவியரங்கிற் கவிபாடிப் பரிசுபெறும்
போதும், கற்றூர்
வழங்காத ஒருதங்கப் பதக்கமதை வழங்கினையால்
வாழ்க என்றேன்.

சாத்திரமும் சரித்திரமும் அளந்து சொலவொண்ணாது
சங்கந் தன்னில்
கீழ்த்திசையின் இளங்குமரி எனப்போற்றி எம்பாட்டன்
சேரன் வைத்துக்
காத்திருந்த தமிழணங்கின் கழுத்தினிலே அணிசெய்து
களிக்க எங்கள்
கோத்திரத்து முயர்தங்கப் பதக்கமொன்றை
அளித்தெனது கொள்கை காத்தாள்!

*1957*

# தந்தி ஒன்று

தந்திச் சேவகன் தட்டிய ஓசையில்
சிந்தையாவும் சிலிர்த்து நடுங்கிட
வந்தனன் என வாசலை எய்துமுன்,
என்றன்உள்ளமோ எண்ணியதாயிரம்·

பல்லுதிர்ந்து படுக்கையில் வீழ்ந்து, கைப்
பொல்லை யூன்றிப் பொடிநடை போட்'டிது
தொல்லை' யென்று துயர்ப்படும் பாட்டியார்
பொல்லா நோயொடும் போரிடும் சேதியோ...

பெற்றநாள் முதலாயிது நாள்வரை
முற்று மென்னுயிர் வாழ்வினுக்காகவே
உற்றதுன்பம் அனைத்தையுந் தாங்கிய
நற்றவத்திருத்தாய் நலம் இல்லையோ?

கருவிலே வளர் கண் மணி யின்திரு
உருவை எண்ணி உளம் மகிழ்தாய்மையின்
கருவமோ எனக் கட்டழகோங்கிய
தரும பத்தினிதான் நலம் இல்லையோ?...

எந்தச் சேதியோ என்றுளமேங்கவும்
தந்தி வாங்கிப் பிரித்துப் படித்ததும்
முந்தை செய்த தவப்பயனுலொரு
தந்தையானதைத் தாளறிவித்ததே!

காதல் செய்து களித்ததன் பயன்
மாதம் ஒன்பதன் பின்பொரு மைந்தனை
பூதலந்தனில் என் நிழல் வாழ்ந்திட
மாதவியென் மனைவி வழங்கினுள்

வண்டி யேறியும் வந்தடைந்தேனகம்
கண்டுநேர் மொழியாள் மகனின்முக
முண்டகமலர் மொய்த்திடு கின்றநீள்
வண்டுபோல் விழியாலெனை ஏசுவாள்!

பட்ட பாடுகள் யாவினுமென்னுயிர்
விட்டுப்போக இருந்தது இதோ ஒரு
பட்டுமேனிப் பயல், எனக்காட்டியே
மட்டிலா மகிழ்வால் மனம் பூரித்தாள்.

*1958*

# இன்று உனக்கும் சம்பளமா?

ஏன் கடலே இரைகின்றுய்
இன்றுனக்கும் சம்பளமா?
ஏழை வீட்டில்
தான்நீயும் பிறந்தனேயா?
தமிழா நீ கற்றதுவும்
தகாத வார்த்தை!
தேன்கடலாய் ஓடுமெங்கள்
திருநாட்டில் பிறந்தபயன்
தெரிகின்றுயோ?
வான்தந்த வளமிலேயோ
வயல்தந்த நிதியிலேயோ
வாடாதே நீ...

காற்செருப்புக் கழன்றதுவா?
கட்டுதற்கும் இடமிலேயா
கால் நூற்றுண்டாய்
தோற்பொருத்தித் தோற்பொருத்தி
துணேயாக உழைத்த அவை
தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம்
போட்டதிலே பொன்னுடை
போர்த்து மேலும்
பாற்சோறும் பட்சணமும்
படைப்பதற்கு நின்னிடத்தே
பணமா இல்லே?

'இபோசா' பஸ்களிலே
ஏறுகையில், வியர்வையினுல்
ஏழை தோழன்,
யப்பானுர் இறக்குகின்ற
புருமார்க்கு மல்வேட்டி
அடடா'டப்டப்'
'சப்'பென்று மூச்சுவிட்டு
சல்லடையாய் மாறிற்ரு
சனத்துக் குள்ளே
இப்படியும் அவமானம்
ஏதேனும் வந்ததுவா?
இரைகின்றுய் நீ!

சட்டம்பி ஆனவன்றே
சந்தையிலே வாங்கிவந்து
சலியாதின்று
பொட்டுதிப் போனாலும்
புழுதிமிகப் படிந்தாலும்
போன மாதம்
கட்டறுந்த குடையினைஎம்
கந்தோருக் கெடுத்துப்போய்
கவனமின்றி
பட்டணத்துக் கடையெதிலும்
பறிகொடுத்து விட்டனையோ
பதறுகின்றாய்?

கல்லூரி மாணவியுன்
மகள்கமலா ஏதேனும்
காசாகேட்டாள்?
அல்லாஹ்போல் அனுதினமும்
சில்லறைக்குக் கடன்தந்த
அலியார் நானா
பொல்லாத வார்த்தையெதும்
புகன்றாரோ? பொருமுகிறாய்
போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே
நின்படலை மட்டுமங்கார்
நிற்கின்றாரோ?

அந்திபட்டும் இருசாமம்
ஆச்சுதினிக் கடன்காரர்
ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்
என்மனையாள் மட்டுமங்கே
இருப்பாள் ஏங்கி
நொந்தென்ன கண்டோம்யாம்
இல்லாமை யாம்கொடிய
நோயைப் போக்க
விந்தை மருந்தறியாமல்
விதியென்று பேசுகிறோம்!
வீடு செல்வோம்.

1959

# விடிகிறதா பொழுது?

காடுவெட்டி நிலந்திருத்தி கமஞ்செய்து, அதனுல்
கால்வயிற்றுக் கஞ்சிவந்தாற் களிப்போடு வாழ்வோம்!
கூடுவிட்டுப் பாய்கின்ற உத்தியோகம் பார்க்க
'கோச்'சேறிக் காரேறிக் கொழும்புநகர் சென்ருல்
வீடுநிறை பொருள்வந்து விளங்கிடுமோ வாழ்வு!
வேண்டாமித் தரங்கெட்ட விடியாத வேலை!
ஓடுகொண்டே வாழ்வார்க்கும் உங்கள்தமிழ்நாட்டில்
ஒய்யார வாழ்வுண்டு, ஒண்டேரோ வீட்டில்.

சிட்டெனவே துடிக்கின்ற சின்னவிழிமூடி,
செந்தமிழின் இன்னிசையில் சிந்தையெலாம்கூடி,
தொட்டிலிலே தூங்கிடுவான் துரையுங்கள் மைந்தன்!
துடித்தெழுந்து ''அப்பாவோ'' என்றழைக்க,ஓடி
கட்டியணைத் தேகோடி முத்தமிட்டபோதும்,
கள்ளனுக்கு அப்பாதான் கனிரசமாம்! அவனை
விட்டங்கே தனித்திருந்து விடிகிறதா பொழுது?
வீங்கியல்லோ போகுமவன் விழியிரண்டு அழுது!

கையூன்றி முற்றமெலாம் கட்டெறும்பு போல
கண்டபடி தவழ்கின்ருன் காவல்செய வேண்டும்!
மெய்யெல்லாம் புழுதியொடு மேசையின் காலொன்றை
மென்கரத்தாற் பற்றியதன் மேலேறத்துடிப்பான்!
ஐயையோ, 'தொப்'பென்று அடிபட்டு வீழ்வான்
அரவணைக்கத் தாமதித்தால் அமளிக்கா பஞ்சம்?
செய்வதெலாம் செய்துவிட்டுச் செவ்வதரம் திறந்து
சிரித்திடுவான், சிரித்திடுவேன், சீற்றமெலாம்மறந்து

காக்கையினைக் கண்டவுடன் கையசைப்பான்,செய்ய
காலிரண்டாற் பூமியிலே கடகடென உதைப்பான்!
நாக்கசைப்பான், யாழ்தோற்று நரம்பறுந்து வீழும்!
நாவினிலே நற்றமிழின் நளினமெலாம் வாழும்!
ஏக்கமின்றி எத்தனைநாள் இருந்திடஉம் எண்ணம்?
எழில்வேந்தன் குறும்புக்கு ஈடோஇம் மண்ணும்?
வாக்குமட்டில் அன்பிருந்தால் வளர்ந்திடுமோஅங்கம்?
வரவுக்காய் ஏங்குகிருன், வளர்மதி நம்தங்கம்!

*1956*

# பனித்துளி

கள்ளும் கசந்திடச் சொல்லும் மழலையின்
காவியத் தேன் சுவையை — எழில்
ஓவியத் தாமரையை — ரோசா
முள்ளில் கிடத்தியே உள்ளந் துணிந்திவள்
மூலையில் தூங்குவதா? — மகள்
காலையில் ஏங்குவதா? — எனத்
துள்ளி எழுந்தொரு கிள்ளு விடுத்தனன்
''கீச்''செனவே எழுந்தாள் — உயிர்
போச்செனவே விழுந்தாள்! — அங்கு
பள்ளி அறைதனில் பிள்ளை மொழிவதை
கேட்டபின் தான்சிரித்தாள் — மலர்ச்
சேட்டையென்றே உரைத்தாள்!

சன்னல் அருகினில் வண்ண ரோசாச்செடி
பெண்மையும் பூத்திருக்கு — பனிக்
கண்மணி போர்த்திருக்கு! — அது
சின்ன மகளவள் வண்ண முகத்தினில்
சிந்துகண் ணீர்த் துளியாம் — எனும்
சிந்தனைதான் பிழையாம்! — இந்த
உண்மை உரைத்தனள் என்னவள் செங்கதிர்
ஊற்றிய செவ்வொளியும் — இது
உண்மையென்றே மொழியும் — மகள்
கன்னத்தில் ஒன்றுவைத்தே அந்தக் காட்சியை
கண்டு மிகரசித்தேன் — கவி
ஒன்றை இதோ சமைத்தேன்.

# அவர்வாழ்க!

மணிமண்டபத்து மதிவந்த தொத்து
மலர் கொஞ்சு மெத்தை மடிமீதில்
அணி கொண்டிழைத்த தளிரொன்று மின்னின்
அடி நின் றெழுந்த எழில் காந்தி,
குனிகின்ற சின்ன மகள்என்றன் அன்பு
மலேயிற் பிறந்த மணியாவாள்!
இனியென்ன அத்தை மகனோடு கூடி
அவள் வாழ்க நீடுபுவி மீது.

இவளென்றன் அத்தை மகள்அன்று, மன்றல்
சுமை தாங்கி நின்ற திது போலா?
தவழ் கின்ற தென்றல் நடையொன்று கூட!
அதுவந்த தெங்ஙன்? அட டேய் டேய்!
சுவைதந்த இன்ப அழகென்ப தென்ப
இதுவே! நீ வாழ்க எழில் ராணி
அவனும் என் ஆசை மகளுக் குகந்த
இளராச சிங்கம்! அவர் வாழ்க!

புயமென் றிரண்டு மலேகொண்டு, மாதர்
புகல்என் றுயர்ந்த தட மார்பன்
மயல் கொண்டு தூவு மழை பொங்கு கண்கள்
மலர்கின்ற அன்பு மணவாளன்!
புயலென்று வந்தென் மகளென்ற மானே
'புசி'யென்று கூறு புலியாவான்
வயல் வென்று பாரின் பசிகொன் றுழைத்து
வயிரங் குவிக்கும் உழவாளன்!

இதுநல்ல சோடி; இறை நின்ற கோலம்!
இளமைக்கு மேங்கும் என துள்ளின்
முதுமைக் குகந்த கனவிற் கனிந்த
முருகுற்ற காட்சி இனி என்னில்...
கதை காதல் கீதம் அமுதோடும் ஊறி
கவி, யாழில் வாழு கலேகூடம்!
அதனோடு கூட மரபாகி, வழை
அடியாகி நால்வர் வரல்கூடும். *1963*

# வென்றுவா!

இரவெல்லாம் இருட்கிடங்கில் கிடந்து, உண்மை
இல்லாத ஒன்றினையே இன்பம் என்று,
அரவோடு தூங்கிப் பின் எழுந்தேன். காலை
ஆயிற்று என்சொல்வேன், அழகை! மெல்லப்
பரவிற்றுக் கதிர் ஆழிப் பாயின் மேலே!
பருத்துருண்ட தக்காளிப் பழம்போல் வந்த
இரவிக்கென் வாழ்த்துக்கள் இயம்பிக் கொண்டே
எழுகின்றேன்; தொழுகின்றேன், இயற்கைத் தாயை!

நிலமடந்தை இதழிடையே நெளிந்து சிந்தும்
நெருஞ்சிப்பூச் சிரிப்புக்கு நெஞ்சைத் தந்து
உலவுகின்ற இளந் தென்றல் காற்று வந்து
உரசுவதால் உண்டாகும் உணர்ச்சித் தீயின்,
கலகத்தில் கட்டுண்டு காதல் நோய்க்குக்
கலவியெனும் மருந்தூட்டக் கரங்களாலே
தழுவிஅணைத் திடுகின்ற கதிரைக் கட்டித்
தழுவுகிறேன், காணுகிறேன் தணியா இன்பம்!

பத்துமணி ஆயிற்றென் மேனிஎல்லாம்
பற்றிஎரி கின்றதென்ன? பன்னிரண்டுள்
செத்துவிடப் பார்க்கின்றேன்! கால்கள் தீய்ந்து
சிந்தியகண் ணீர்த்துளிகள் செறிந்தாற்போல
முத்திரைகள்! சூரியன்தான் சுட்டான்! பாவி!
முகட்டுக்கா வந்துவட்டான்? வெளியில் நின்ற
எத்தனையோ உயிர்க்கூட்டம்! எங்கே எல்லாம்?
ஏகினவோ? இறந்தனவோ? இவனா கொன்றான்?

பசிக்குணவைக் குளிசைகளாய்ப் படைத்ததில்லை!
பணத்தினையும் ஊசிகளால் பாய்ச்ச வில்லை!!
விசித்திரமாய் ஏதேதோ படைத்துத் தந்து
வினைக்குதவி மானிடரால் விரும்பப் பட்டாய்!
புசிக்கின்றேன், புதுச்செயல்கள் போற்றுகின்றேன்!
புல்லிஅணைத் திடஎண்ணி அருகில் வந்தால்
விசுக்கென்று வான்வெளிக்கே விரைந்து விட்டாய்
விஞ்ஞானி...வீரன்நீ விந்தை செய்தாய்!

இயற்கையினைப் புரிந்துவிட்டேன் என்கின்றாய் நீ
என்றாலும் அஞ்சுகிறேன் உன்னைக் கண்டு!
மயக்குகிற அழகன்நீ! மறுக்கவில்லை;
மறுபடிஏன்பயம்? என்றாய் மகனே! இன்பம்
பயக்கின்ற மரணத்தாய் இரக்கம்இன்றி
பறித்திடுவாள் நம்முறவைப் பாவம்! ஏனோ
வியக்கின்றாய் தம்பீநீ வீரன்; அந்த
விண்ணுலக யாத்திரையை வென்றுவாபோ!

# கடவுளே

கடவுளே ஏழைக் கவிஞன்நான், சொந்தக்
காரியம் ஆவதற்காக,
குடலையிற் பூவும், குச்சி, தேங்காயும்,
கொண்டுமைக் காணவும் வந்தேன்;
மடையன் நான்! கோயில் மூலஸ்தானம்
மண்டபம் முழுவதும் தேடிக்
கடைசியில் ‘கபுடா’ வீட்டையும் ஒருகால்
கண்களால் துழாவினேன்; அங்கே...

பூட்டிய வீட்டின் உட்புறமாகப்
புண்ணிய, உன்குரல் கேட்டு
ஒட்டினேன் கதவின் ஓட்டையில் விழியை;
உமக்கது தெரிந்திருக்காது!
நாட்டிலே, ஊரில் நடப்பதுபோல், நும்
நாயகி யோடுநீ இருந்த
காட்சியைக் காணப் பாவிநான் முன்னர்
கனதவம் செய்துளேன் போலும்!

உமையினை, அடியார், ஓவியம் தேர்ந்த
உயர்கலை வாணர்கள், சுத்தக்
கருமையள் என்றே காட்டியுள்ளார்கள்,
கற்பனை வற்றியதாலோ?
உமையவள்; கோயில் பூசகர்தமது
உத்தம மனையவள் சாங்கம்
அமைவதை நேரில் அறிகிலர் போலும்
ஐயனே! அவர்வெறும் பொய்யர்!

ஓட்டிலே பிச்சைஏற்றுமுன் மதுரை
வந்தியின் கூலியாய்த்; தென்னன்
தீட்டிய பிரம்படித் தழும்பொடு வறுமைத்
தீயிலே வாடியநீரோ
நீட்டுகாற் சட்டை சங்கிலி மோதிரம்
நிறையவும் அணிந்திருந்தீர்! ஓய்
லாட்டரி எதுவும் அடித்ததா உமக்கு?
'லவ்'விலும் இறங்கிவிட்டீரே!

ஐயர் கோவிலுக்குள் மந்திரம் சொல்லி
அழைத்ததால், களைத்தனர்; முடிவில்
கையினைத் தட்டிப் பூசையை முடித்துக்
கட்டிகள் வந்தவர்க் கீந்தார்.
ஐயகோ! உமையை ஆருமே அற்ற
ஐயரின் அறையிலே விட்டு
பையநீர் நழுவல் பார்த்தபின், திரும்பி
பாதையில் நான்நடை கொண்டேன்.

அன்று பின்னேர மாயினும் என்றன்
அலுவலைப் பார்க்கலாம் என்று
உன்னிடம்ஓடி வருகையில் தெருவில்
ஓர்பெரும் காரிலே இருந்தீர்,
அன்றுநான் அறையில் உம்மொடும் பார்த்த
அன்னையாம் 'உமையவள்' கூட
உன்னருகிருந்தாள். ஐயரே காரை
ஓட்டினுர் நாட்டியம் பார்க்க.

ஆகையால் என்றன் அலுவல் அன்றிரவும்
ஆவதா யில்லையென் றறிந்து
போகையில் யாரோ பொருமையில் ஒருவன்
'புதுப்பணக்காரன்' என்றும்மைக்
கேவலமாகப் பேசுதல் கேட்டேன்;
கிடக்கிருன்... மடையனை விடுவோம்.
ஏகனே! இனிமேல் என்றும்மைக்காண
இயலுமோ தயவுசெய் தெழுதும்.

***1964***

# பாவம் வாத்தியார்!

வாழத் தெரியாமல் வம்புகளில் போய்மாட்டும்
ஏழைப் புலவர் பெருமானே; என்ன இது!
கையிலே மூட்டை முடிச்சும் கவலைகளோர்
பையிலுமாய் நிற்கின்றீர்! 'பஸ்சுக்கோ? நீண்டதொலை
தூரப் பயணம்போல்! தொந்தரவே! — எங்களது
ஊரார் உமையிந்த ஊரைவிட்டே ஓட்டுதற்காய்...
கல்முனைக்குப் போயலைந்து காசும் கொடுத்து 'ரைப்பிங்
செல்லையா' அண்ணரது சிந்தனையைப் போட்டுடைத்து

வெல்ல முடியாது சோடித்த பிட்டிசத்தில்
சொல்ல வெட்கமே, எனினும் சொல்லாமலும்போக
ஒண்ணு திருக்கிறது! ஓம்அந்தப் பிட்டிசத்தில்
உன்னை நானுமொரு கையொப்பம் போட்டதுண்மை!
ஏனென்பீர்? ஏதும் எனக்கோ தெரியாது...!
நானுமிந்த ஊரில்நெடு நாளாக வாழ்கிறவன்.
போடென்றார் போட்டேன்!
நான்போடாது விட்டிருந்தால்—
ஓடென்றுமையேபோல்ஊரைவிட்டேஓட்டிவிட்டால்...?

ஊரையே கூழாக்கி ஊதிக்குடிக்கும் கைக்
காரரிவர்! கைநிறையக் காசும், எடுபிடியாள்,
ஏராளமான இனசனமும் உள்ளவர்கள்!
ஆரவரைக் கேட்பவர்கள்? ஆலயங்கள், கூப்பன்
கடைகள் அரசாங்க நன்கொடைக் காசு
கிடைக்கின்ற சங்கங்கள் எத்தனையோ...அத்தனையும்
ஆண்டே அனுபவிக்கும் ஆகப் பெரியவர்கள்!
வேண்டியவர்!! உம்மை விளங்காமல் வைக்கவில்லை!

நீர்இந்த ஊர்க்கு நியமனம் பெற்றுவந்த
நேரத்தில் இவ்வூர் இருந்த நிலைமைகளும்,
ஆறேழே ஆண்டில் அடைந்த வளர்ச்சியையும்,
ஊரோடு கூட உணர்வேன்யான்; உண்மையில் நீர்
வாழத் தெரியாத வாத்தியார் தான்அண்ணே!

ஏழேழ் தலைமுறையாய் எம்மூரின் கோயில்
மதிலாய் உயர்ந்து நிற்கும் மாபெரிய காடு!
அதிலே உமக்கென்ன அக்கறையோ? பள்ளிச்
சிறுவரை விட்டுச் சிரைத்து நிலவேர்
அறுத்துப், பிடுங்கி, அகற்றி, அம்மன்வீதியினை
வெட்டை வெளியாக்கி
வெள்ளைமணல் கொட்டிவைத்தீர்.
புற்றுடைத்துப் பாம்புகளும் போக விடைகொடுத்தீர்
மாரியம்மன் நேர்த்தி மதுவாக ஆண்டுதொறும்
சாராயம் கொண்டு தருவார்கள், சான்றோர்கள்
ஆனபக்தி மான்கள்! அவற்றையெலாம் — பூசாரி
ஆணையிடக் கொண்டுபோய் 'அம்மன் பரிகலங்கள்'
எல்லாம் மதுவெடுக்க என்றிருந்த காட்டையெலாம்
தொல்லைமிகப் பட்டுவெட்டித் துப்புரவு செய்தீரா...!
அம்மாள் உமது செயலை ஒருபொழுதும்
சம்மதியாள் என்பதையூர்ச் சான்றோர்கள் நன்கறிவார்!
அம்மட்டுந் தானு...? அவசரக் காரன் நீர்!
சும்மா கிடவாமல் சோலிக்குள் மாட்டுகிறீர்!

கூப்பன் கடைஓர் குடும்ப நிருவாகக்
காப்பில் இருப்பதையும், கல்லாஊர்ப் பாமரர்க்கு
உள்ளபடி பண்டம் உதவா துறவினர்க்கே
கள்ளத் தனமாய்க் கடத்தலையும் — கண்டித்துப்
பேசி, அதைப் பெரிதாய்ப் பேப்பரிலும் போடுவித்தீர்!
வாசித்துக் கேட்டவர்கள் வாழ்த்திஞர்! வாய்திறந்து
பேசிஞல்...அன்றுமது வீட்டிற் பொழிந்தகற்கள்
'வேசிமகன்' என்ற வெறிச் சொற்கள்...பாய்ந்துவந்தே
எங்கள் மனைக்கும் எரியூட்டி வீணுகச்
சங்கை குறைத்திந்தச் சந்தியிலே விட்டிருக்கும்!

பள்ளிக் கூடத்தில் பகலிரவாய்ப் பாடுபட்டுச்
சொல்லிக் கொடுத்துச் சுணையேற்றிக், கல்வியிலே
நாட்டத்தைக் கூட்டி நயம்பலவும் துய்க்க வைத்தீர்!
வீட்டுக்கு வீடு பிள்ளை வீசிப் பிடித்தீரே!
பெற்ருர் தினங்கள் - விளையாட்டுப்போட்டி-மற்றும்
சுற்றுலா என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தீரா!...
வாசிகசாலை, வளர்ந்தோர் வகுப்புவைத்தீர்!
காசு விளையாட்டுக் காவாலிக் காளைகளை
ஏசி, விவசாயம் - ஏற்றதொழில் செய்யவைத்தீர்!
கூசும் படியாம் குணக்கேட்டைக் கொல்லுகிறிர்!
'நாடகங்கள் போட்டுரை நையாண்டி செய்கின்ருன்!
வாடா வெளியாலே வாத்தியுனைப் பல்லுடைப்போம்!'
என்ருர் சினந்தார் எழுந்தார்கள் போடிமக்கள்,
என்ன புதினம்! இளந்தாரிக் கூட்டமொன்று...
பாலன், அழகையா, பார்த்தன், சிவம், சாமி
வேலன், வயித்தி உங்கள் முன்னைநாள் மாணுக்கர்
கூட்டத்திருந்து குதித்து வெளியேறி
வீட்டிலிருந்து கொம்பும் வீணர்களைக் கூப்பிட்டே...

'உண்மைகளை ஊரில் உறையும் சிறுமைகளை
சொன்னுல் உமக்குச் சுருக்கென்று தைப்பானேன்?
பிள்ளையார் கோயில் பெயரில் பிறவூர்வாழ்
வள்ளல்கள், தானம் வழங்கும் வயல் நிலங்கள்
பெற்றுவந்த கோயில் பிராமணனைத் தன்னுடைய
கற்பால் வளைந்து கலியாணம் செய்தவளின்
சொத்தாமோ?... கோயிற் சுதந்திரமோ? குஞ்சியப்பன்
அத்தானும் மாமாவும் அண்ணுவும் தம்பியுமாய்ச்
சாப்பிடவா கூட்டுறவுச் சங்கக்கடை? சனத்தை
ஏய்ப்பதற்கா? இல்லையது எல்லோர்க்கும் உள்ளதுவோ?
சாக்குவிற்ற காசெங்கே? சாராய மாயிற்ருே?
போக்கணம் கெட்டவரோ போடிமக்கள்? - சங்கத்துக்
கட்டிடம் கட்டவென்று காசுபெற்றீர் ஆட்சியிடம்;
எட்டு வருடங்கள், எங்கேயோய்... கட்டிடம்?
கல்வீடு, உழவுமெசின், கார், காணி, கையிருப்பு
எல்லாம் உமக்குமட்டும் எவ்வகையாய் எய்தினவோ?
ஏதிவைகள்? ஏதிவைகள்? எல்லாம் பகற்கொள்ளை!
சாதுக்கள் போன்றே சனத்துள் நடிக்கின்றீர்!

எல்லாம் எமக்கும் புரிகிறது! கள்ளர்களே!
'பல்லுடைப்போம்' என்றெவரைப்
பண்புகெட்டுப்பேசுகிறீர்?
என்றுரத்துக் கேட்டார் இளைஞர், எதிர்த்தவரை;
ஒன்றும் விளங்காமல் ஊர்ப்பெரியார் யோசித்தார்!
அன்றிரவே பிட்டிசத்தை அச்சடித்தார்!—உம்மீதில்
ஒன்றிரண்டா குற்றங்கள்!—'ஊரைக் கெடுக்கின்றீர்!
சாராயம் போடுவதே சத்தமிடக் காரணமாம்!
ஆரோ ஒருத்தி தொடுப்பு! அவள்பேர் பூரணமாம்!
ஆரையும் கண்டால் அரசியலே பேசுகிறீர்!,
காரணம் நீர்... ஆள்பெரிய 'கம்யூனிஸ்ட்' காரனும்;
மாணவர்க்கும் அந்த மனப்பான்மை ஏற்படுத்தி
மானம் கெடுக்கின்றீர் ... மாபெரிய போடிகளே!'

'ஏன்? என்றிவற்றை விசாரித்து — இங்கிருந்தும்
ஏன் இவரை மாற்றல் இயலாது?' என்று
அமைச்சு முதல் கல்வி ஆலோசகர் வரை
உமக்கு நடவடிக்கை... ஓம்! உடனே வேண்டுமென
'இங்கிலிசில்' நன்றாய் இயற்றி இருந்தார்கள்!
சங்கிலிப் போடி குற்றச் சாட்டர்:...
அதைத் தொடர்ந்து
பத்தாண்டின் முன்பு செத்த பல்லன் கணபதியன்,
வத்தவக்காயன், வழுக்கமொட்டை மூத்ததம்பி,
பத்தினியன், குஞ்சன், பனையான், பலாக்கொட்டை,
பொத்துவிலான் பொன்னன், பொருக்கன், நரைச்சீனி,
கண்டாரை வாலாட்டிக் கந்தன் முதலானோர்
கண்டபடி யாகவெல்லாம்
கையொப்பம்போட்டிருந்தார்!

நானொருவன் மட்டுமுமை நண்பரே ஆதரித்தல் . ?
வீணென் றுணர்ந்தேன்;
விதி! யென்றேஒப்பமிட்டேன்!
மாற்றம் தொலைக்கோ? மனிதருள்ள ஊர்தானோ?
ஆற்றைக் கடக்கும் அவதிகளும் உண்டாமோ?
பள்ளி தளபாடம் உள்ளநல்ல கட்டிடமோ?
பிள்ளைகளும் அங்கு படிக்க வருவாரோ?

போக்கு வரவு பொருந்தும் இடமில்லையேல்
ஆக்கினைதான் ஐயோ!... அதற்கென்ன போய்வாரும்?
நீதியைப் பற்றி நினைவார்க்கு நேர்வதிதே!
சாதிக்கு மட்டுமே சங்கைசெய்யும் எங்களின்ஊர்!
நீர் உமது வார்த்தைகளால் நீதித்தீ மூட்டுகிறீர்
ஆர் செய்வான் நீரோர்... அரசாங்க... ஊழியன்!

வாழப் பழகுங்கள் வாத்தியார்! வையகத்தில்—
ஆள்வோர் சிலபேரும் ஆளப் படுபவர்கள்
கோடிக் கணக்கும் குவிந்து, தமை இழந்து,
பேடிகளாய்ப்,பேயாய்ப்,பிணமாய்க்,குருடாகிச்,
சாராயத் துள்ளிகளில் சத்தியத்தைப் பூசிப்பார்!
ஆராண்டால் என்ன? அந்த ஆள்வோர் திருப்புகழைப்
பாடி, நான் என்னுடைய பங்கைப் பெறுகின்றேன்.
கூடினுல் நல்ல குடி — விருந்து கொண்டாட்டம்!
எல்லாம் கிடைக்கும் எனக்கு! உமக்குமவர்
இல்லையென்று சொன்னுர்கள்?
ஏனிந்தப் பொல்லாப்போ!

ஆராரோ அக்கினியை அள்ளி விழுங்குகிருன்!
ஊரைச், சுளையிருக்க உள்ளால் உறிஞ்சுகிருன்!
காணுமலா ஊரார்? கண்டாலும்... பேசாமல்...
மானமாய் வாழ மனத்தைப் பழக்கி விட்டார்!
நானும் அவர்வழியில் நாணயமாய் வாழ்பவன்! நீர்
வீணுக வம்பை விலைகொடுத்து வாங்கிவிட்டீர்!

என்ன சிரிக்கின்றீர்? எங்கிருந்தால் என்ன கற்ருர்
என்ருே?... சரிதான் நீர் எப்பொழுதும் கூறுவதே!
'ஆளுமே அன்றி, அறியாமைக் கீழ்ப்படிந்து
ஆளப்படுமோ அறிவு?' அதோ...பஸ்தான்!
ஏறுங்கள்; உள்ளே இடமும் இருக்கிறது;
வாருங்கள் ஐயா! வணக்கம், போய் வாருங்கள்!

***1968***

# பயண காவியம்

அரசர்கள் தமது பெருமதிப்புடைய
இனியதான விடுதலைப் பொழுதினை
அனுபவித் திடுகிற அழகிய தீவினில்
அவதரித் ததைநினைந்து அகமகிழ் வடைந்தேன்
நவநவ நதிகள் கண்டேன்
நானதை அடைந்தும் நாட்கள் பலவே!

ஒரு நாள்
தனிமையில் கிடந்தும் நினைந்தேன்
ஒரு குரல் எனதுள்ளே கேட்டது
''தனிமையை இனிமையாய்த் தருக்கி
மகிழ்ந்து — கனிகளை நுகர்ந்தே
களிகொள் தோழ
உனக்குமுன் பலர்
உனைப் போல இங் கிருந்தார்''

மனத்திலே குளப்பம் கனத்தது
கடலையும் கண்டேன்
தளர்வு கொண்டேன்
ஆயினும் அண்டையில் — கரையில்...
ஓடமும் ஒன்று!
புதிய நம்பிக்கை புகுந்ததா...
எழுந்து விரைந்து போய் ஏறினன் அதிலே.

பாயினை விரித்து கம்பினை யூன்றி
தோயும் தொடுவான் மீதினில்
நிலவு கலங்கரை விளக்கமாய் விளங்கும் திசையினில்
கலத்தினைப் பரந்த கடலிடைச் செலுத்தினேன்.

நடுவில்
பெரும் புயல் மூண்டது. என் ஓடம்
சடுதியாய் மறைந்த சலப்பாறையிலே
தட்டவும், சிறிதே தகர்ந்தது. அதன்வழி
சட்டென உள்ளே சலம் ஏறியது.

தீவினை ஒருமுறை திரும்பி
இறுதி ஆவலோ டுற்றுப் பார்த்தேன்.
ஆயினும்...
ஆழியின் நடுவினில் ஓடம்
அமிழ்கிற நிலையில்! அதன்மேல் யானே.

நடுக்கடலிடையென் நாவாய்,
இவ்வண்ணம்... உடைப்படும்
என நான் உணர்ந்திருப் போனல்...
புறப்படு முனம், ஒரு முறை புதிதாகத்
திருத்தியும் இருக்கலாம்.
எதற்கு மோர் அவசரம்!

மனக்கடல் குமுறி அழுதது. அதுசரி......
எனக்குமுன் பலரிதில் ஏறியும்
கடலைக் கடந்தனராமே யாயின்,
கிடந்ததே ஓடமிக் கரையில் எவ்வாறே?

போனவர் புதுஊர் புகுந்த பின்,
ஓடம் ஏனவர்களுக்கு?
எறிந்திருப் பார்களிக் கடலிடை!
திரும்பிய காற்றிதை மீண்டும்
அடையவிட்டிருக்கலாம், ஆங்கு
கடையவன் எனையும் கரைசேர்த்தற்கே!

ஓட்டையில் எனது உள்ளங் கால்களைக்
கூட்டியும் அடைத்தேன்.
குனிந்து, உள்ளேறிய
நீரினைக் கையினால் வாரியும் இறைத்தேன்.
ஓரிரு கணங்களில் ஓடம் நிமிர்ந்தது.
ஓடவும் தொடங்குதல் உணர்ந்தேன்;

நெடுங்கடல்
பாடிய மரணப் பாட்டொரு மட்டாய்
ஓய்ந்து ஒடுங்கி ஒழியவும், விரைந்து
பாய்ந்ததென் ஓடம்.
பயணமா? ஓடமா?
எது என் குறிக்கோள்? இனுமொருமுறை போய்
அதுகல்லிடையே, அடிபட உடையலாம்!
புதிய ஊர் வரையிலும் போகவும் போகலாம்!

எது நடந்தாலும் என்இலக்கோ
இப்பால் அப்பால் இனித்திரும் பாதே!

*1965*

# கடிதத்தைக் கிழிக்காதே

முத்திரையை ஒட்டும்முன்
உறை கிழிந்தால்,
மையூறி மோசமானுல்...
கசக்கியதைக்
கூடைக்குள் எறிவதாலே
சதம் ஒன்றே நட்டமாகும்,
பரவாயில்லை.

முத்திரையை ஒட்டியபின்
உறை கசங்கி
மையூறி
மண்ணுய்ப் போனுல்....
வெகுநேரமாகும்
அதைக் கழற்றிக் கொள்ள!

பொருள்போனுல்....
போகட்டும்!
பொழுதையுமா வீணுக்கல்?

ஆதலினுல்...
என் அன்பே!
முத்திரையை ஒட்டிய பின்
கடிதத்தைக் கிழிக்காதே!

*1964*

# முடிவில் ஒரு நாள்....

முடிவில் ஒருநாள் அவள் வந்தாள் என்
முதுமை கண்டே மிகநொந்தாள்!
நடை பாதையிலோர் அடிதூக்கிடவும்
முடியா நிலையில் முதுமை வடிவில்...தனியே
முடிவில், ஒருநாள் அவள் வந்தாள்!

பசியோ டொருநாள் தெருவின் முனையில்
பயணம் செயுமோர் பகல் வேளையிலே,
கசையோ டெனது எசமான் உருவில்,
கடைநோக் கினிலென் உயிர்போக்கியவள்...பகலின்
முடிவில் ஒருநாள் அவள் வந்தாள்.

ஒருநாள் பனிமென் மலராய், மதிலின்
உயரே அழகாய், அவள்நின் றதுவும்,
உருகும் மனதின்வழி போய், அவளை,
'உனையே தருவாய்' எனநின்றதுவும்...மறவா
முடிவில் ஒருநாள் அவள்வந்தாள்!

மலரா முகமா கலை? யென்றறியும்
மனதோ டவளை அணுகும் பொழுதில்
அலரா நகையேன்? அதுவே விடையா?
அறியா தவலத் தொடுசென் றதுவும்...நினைவாய்
முடிவில் ஒருநாள் அவள் வந்தாள்

'கதை கட்டுரையாய் முடியாதவை; நம்
கனவின் பயனை நுகரும் சுபநாள்
இதுவே எழுவாய்! எனதின்னுயிரே!
இனியாம் இணைவோம் இதயங்களினுல்'....எனும்ஓர்
முடிவில், ஒருநாள் அவள்வந்தாள், என்
முதுமை கண்டே மிகநொந்தாள்!

# முருங்கைக் காய்

கனநாள் கழிந்தொரு கவிதை சுரந்தது!
கோப்பியொன் றடித்தேன்;
கொப்பியை விரித்தேன்
கூப்பிட்டாள் இவள்?
ஏனே? என்றேன்.

கறிக்குப்
புளியம் பழம்போல் ருல்
வாங்கியிருக்கின்றேன்.
அதற்குள் வைத்துக்குழம்பு வைக்க
முருங்கைக் காய்தான் ருசியாய் இருக்கும்!
ஆதலால்,
அதோநம் வாசல் முருங்கையின்
உச்சிக் கந்தில்....
ஒன்று....இரண்டு....மூன்று,
நீண்டு முற்றியகாய்கள்!
ஒருக்கால்....ஏறி
உசுப்பி விடுங்கள்; என்ருள்!

மறுக்கலாம்....
மீண்டும் இரவுகள் வராவேல்!
அதற்காய் இசைந்தேன்;
அவள் விருப்பின்படி
முருங்கையில் ஏறி, முறிந்து
விழுந்தேன்!

அந்தோ! வந்த அருங்கவி
இந்த அமளிகண் டெங்கோ மறைந்ததே!

*1965*

# தீ

நாணல் புதர்கள் கூனித் தீய
நகர்ந்து, சீறிச் சினந்து, தீண்டும்
கோணு நாக பாம்பே,வாவா!
கொழுத்து கொழுத்து கொழுத்து தீயை!

ஈனப் பறவை தீனத் தொனியில்
எட்டுத் திசையும் சுற்றிச் சுற்றி
வானக் கடலில் மூழ்கித்தொலையும்!
வாவா நாக பாம்பே! வாவா!

அஞ்சிச் செல்லும் பறவைக் குழுவில்
அடியேன் மிகவும் சிறியேன் எனினும்
துஞ்சச் சிறிதும் துயரம் இல்லேன்!
தொடர்ந்து நடந்து படர்ந்து வாவா!

நீ, ஓர் நாள்இங் குறுவாய் என்னுய்
நினைவைப் பனியின் திரையால்மூடி,
போய்எங்கெங்கோ பொழுதைத் தொலைவார்
பொழுதும் மறையும் பொழுதில் துயில்வார்!

மதுவின் பொழிலை மாந்துஞ் சிலபோய்,
மாதர் மடுவில் நீந்துஞ் சிலபோய்,
பொதுவில் ஏதும் புகழ்பொன்தேடிப்
புலரிப் பொழுதில் இரையும் சிலபோய்!

இதெலாம் உன்றன் வரவின் பயமே
எதிர்பார்த்ததுபோல் இற்றைத் தினமே
மதபோதகர்போல் மலேபோல் எரியின்
மடையே! உடைவாய்; அடைவாய் அடவி!

எழுவான் கரையின் இளஞாயிறு, நீ
எதிர்நாள், ஒருநாள் வருவாய் என்றே,
எழுதுங் கவிதை இதையார் நுகர்வார்?
எரிநீ, அவனுள் எழுவோன் அலவோ!

வெண்பஞ் சென்னுடல்; வேட்கை நெய்யில்,
விளங்கும் வெள்ளே துலங்கு முன்னம்,
உன்போல் உணர்வின் திரியில் தீபம்
ஒளிரும்! அன்பைப் பிழியும் கீதம்!

நாகம் போலும், நானும் நீயும்
நண்பர் காண நாணப் புல்லி
போகம் புணர்வோம் தீயே வாவா!
பொங்கிப் பொங்கிப் பொங்கீ...வாவா!

*1965*

## உறவு!

மரணித்துப் போனஎங்கள்
மாஞகப் போடிப் பெரியப்பா,
நீர் ஓர் பெரிய மனிதர்தான்!
பெட்டி இழைத்தும்,
பிரம்பு பின்னல் வேலைசெய்தும்,
வட்டிக்குளத்து வரால் மீன் பிடிக்கக்
கரப்புகளும் கட்டி விற்றுக்
காலத்தை ஓட்டும் ஒருகிழவன்.
என்றே நம் ஊரறியும்,
நேற்றுவரை.

பத்துநாள் தொட்டுப்
பகலிரவாய்ப் பாய்மீதில்,
வைத்தியமே இன்றி,
வயிற்ருலடியோடும்,
சத்தி எடுத்தும், வாய்
சன்னீ பிசத்தியும்,
செத்தும் பிழைத்தும் கிடந்தீர்
சுவரோரம்.

'எட்டுநாளாக இரணம் எதும்
குடலுக்குட் செல்லவில்லை!'
எனஉருகி உம்மனைவி வள்ளி,
புளுங்கல் அரிசவிந்த வெந்நீரை
அள்ளி உமக்குப் பருக்குகையில்,
நீர் - அவளை,
ஐம்பது ஆண்டாய்
அனுபவித்துக் கொண்டதற்கும்,
ஒன்பது பிள்ளைகளை உற்பவித்துப்
பெற்றதற்கும்,

ஈற்றில் உமக்காய்
இரவுபகல் கண்விழித்து,
ஊற்றை அளேந்ததற்கும்,
உம்குறைகள் கேட்டதற்கும் ஈடாக,
ஓர்வார்த்தை யேனும் இயம்பாமல்
போய்விட்டீராமே!
புலம்புகிருள் வள்ளியம்மை!

நாய்படாப் பாடுமது
நோயிலவள் பட்டதுண்மை
என்ருலும்...ஓர்வகையில்
ஆனந்தம் வள்ளிக்கு!
என்னவென்ருல்—
தன்புருஷன் மாஞகப் போடிக்கும்
எத்தனேபேர் சொந்தம்! அதோ,
எக்கவுண்டன், எஞ்சினியர்
வைத்திய கலாநிதிகள்
வர்த்தகர், பேராசிரியர்
சத்தா சமுத்திரம்தான் சாதிசனம்.
என்பதனுல்!

தந்திகிடைத்து
மிக நொந்துபட்டுவந்தார்கள்.
அந்தி வரைக்கும்எதும்
ஆகாரம் தின்ஞமல் குந்தியிருந்து,
குளறி அழுதார்கள்!
ஐந்தாறுகாரில்
இரவே ஊர்போய்விட்டார்!

எத்தனைபேர் சுற்றமிந்த
ஏழைக் கிழவனுக்கு!
இத்தனைநாள் மட்டுமிது
யார்க்கும் தெரியாது!
உண்மையினைக் கண்டெங்கள்
ஊர் - விரலை மூக்கில் வைக்கும்
வண்ணம் மறைவாக வாழ்ந்தீர்!
இறவாமல் .....

இன்னும் உயிரோ டிருந்தீரே யாமாகில்
என்ன வகையாய் அறிவோம் உறவினரை!
செத்தாலும் செத்தீர் நும்
செல்வக் குடும்பத்தைப்
பத்தியமாய்ப் பார்த்திந்தப்
பாரில் வழங்கிவரும்
உண்மை உறவறியும் ஊர்!

*1966*

# தொண்டு

வெம்புமணல் உண்டுமிஞ்சி
வெள்ளம் பெருக்கெடுத்துப்
பம்பும் மழைநீர், பயிரழிவுபண்ணுமென
அஞ்சிக், கமக்காரர்
ஆழியொடும் கூட்டிவிட்ட
குஞ்சி நீர் ஓடை
குறுமணலே வார்ந்திருக்கும்!

பாம்பாய் கடல்வரையும்
பாயும் அந்தப் பள்ளத்தில்;
சாம்பிக் குருத்தும் சருகான வெள்ளறுகைச்
சப்பி; வயிற்றைச் சரிக்கட்டிச் சாய்பொழுதில்
'அப்பாடா' என்று களைஆறும் பசுவொன்றின்
பக்கத்தில் வந்து பழகுமிரு காக்கைகள்;

வெட்கத்தை விட்டும்
விரைந்து பசுமீதில்
ஏறி இறங்கி, இருந்து, விளையாட்டில்
ஊறி உணர்ச்சியிலே
ஒற்றுமையைக் காட்டும்,

சுடலையிலே வண்ணார்
சலவைசெயும் கேணி
வடபால், விழுதூன்றி
வாழும் வடக்கிளையில்,
கூடுகட்டும் நோக்குடனே
குச்சுவகை சேகரிக்கப்
பாடுபடுகின்ற அண்டங் காகங்கள் தாமவைகள்.

கொசுக்கள் படை 'நொய்ங்ங்'
குழல்கேட்டுச் சாட்டை
விசுக்கும் பசுவாலில் தொங்கும் கருங்குழலில்
கட்டாதலைகின்ற காட்டெருமைபோல் பேன்கள்.
கிட்டநெருங்கி மயிர்கோதி, வாய்ஊறிப் பேன்
குத்துகின்ற காக்கைக் குடும்பம்;
பொதுத் தொண்டில்
வைத்திருக்கும் நம்பிக்கை
வாழ்த்தத் தகுந்ததுவே!

அப்பொழுதில் அப்பசுவுக் காத்திரமேன் வந்ததுவோ?
சப்பளிந்துபோன வயிற்றைச் 'சடா'ரென்று
தூக்கி, வால்தூக்கிச் சுழற்றி அண்டங் காக்கைகளைத்
தாக்கியது! கொம்பைத் தரைநோக்கித் தாழ்த்தியது!

காக்கையர் ஏதும்
கதையாமல் வேறுபுறம்
நோக்கப், பசுமாடு ஊர்
நோக்கி நடக்கிறது.

தொண்டுக்கு, நன்றி
துளியுமற்ற மாடிதென்று
அண்டங் காகங்கள் அறையும் அறமொழியே
உண்மையென எண்ணியதை ஒப்புகையில்...

காகங்கள்
சொண்டுகளைப் பார்த்தேன்.
சுருக்கென்ற துள்ளத்தில்!
தொண்டுக்குக் கூலியவை
கொண்ட பசுவால்மயிரைக்
கண்டேன். 'இதென்ன கனம்
தொண்டருங்கள் சொண்டினிலே!'
என்றேன். சுடலையிலே ஆலமரம் நோக்கியவை
சென்றமர்ந்துகொண்டென்னைப் பார்த்துச்சிரித்தனவே

*1966*

# அடிசடையா!

அடிபறை அடிபறை அடிசடையா — ஊர்
அரள்க! அரள்கவென! அடிசடையா!

அன்னம்போலத் தலையைமுன்னால் நீட்டு — கையை
அப்படியும் இப்படியும் காட்டு
முன்னும் பின்னும் காலைத் தூக்கி
உன்னி யுன்னித் தாளந் தீர்த்து

அடிபறை அடிபறை அடிசடையா! — ஒரு
அவசர மிலையினி அடிசடையா!

பாடை கட்டி முடியவில்லை ஆடு! — சனம்
பார்த்து நல்லாய் ரசிக்கட்டுமே ஆடு!
வாடைக் காற்றில் உனதுவெள்ளைத்
தாடி போனால் கவலையில்லை!

அடிபறை அடிபறை அடிசடையா! — அயல்
அறிக அறிகவென அடிசடையா.

இறைச்சிக் கடை காரரிவர் சாது — வீசும்
எலும்புக்காகப் பெட்டைநாய்கள் வாது!
பொறுக்க வந்த நாய்க்கெலும்பு
பொறுத்த தற்குயார் பொறுப்பு?

அடிபறை அடிபறை அடிசடையா — இவர்
அறமும் அயலறிய அடிசடையா.

தங்க மென்றால் எங்கள் முதலாளி — தானத்
தருமத் தண்ணீர் நிறைந்து பொங்குங் கேணி
தங்கக் காசின் ஓரமாகத்
தங்கி வாழும் நீதி! தூசு

அடிபறை அடிபறை அடிசடையா! — இனி
அதிசயம் அறிகென அடிசடையா!

சந்திவரும் அதில்சவத்தை நிறுத்து! — இவர்
சாதிகுலம் கோத்திரத்தை மதித்து
குந்திக் கெந்தி ஆடு; கொட்டு!
வந்த நாலூர் காதில் முட்ட

அடிபறை அடிபறை அடிசடையா! — அவர்
அழகிய செயல்களை அடிசடையா!

குப்பை யோடு உண்மையையும் கூட்டி — பாவம்
கொளுத்த வென்றே போகிறீர்கள் காட்டில்
எப்படிக் கொளுத்துவீர் மெய்
எரிக்க நின்று சிரிக்கும் என்று ..

அடிபறை அடிபறை அடிசடையா — ஊர்
அரள்க அரள்கவென அடிசடையா!

*1965*

# பசையற்ற மண்

பொன் மெத்தைபோல்,
கால்புதையும் கடலோர மண்ணின் மடியில்
மலிந்து கிடப்பன,
புன்னை மரமும், அடம்பும், பிரம்புகளும்,
தென்னை சிலவும்
ஒரு தேற்றுவும், காஞ்சுரையும்.

கந்தருவர் வந்து காதலிக்க வாய்ந்த,
நிழல் செந்தாழை
பூத்துச் சிரித்துச் செழித்திருக்கும்!
வற்றல் மணலின் வடக்குத் திசையினிலே...

அற்ப சுகத்தை அகன்று,
தவம் பூண்டு,
காலத்தால் ஊனம் கரைய
எலும்பாகி, மூலத்தைத் தேடி,
முயலும் முனிவரர் போல் பற்றைகள்!
ஆடுகளின் பற்றுத் தளிர்க்கு மிடம்!

மற்றொருபால்,
தோணுமடுநீர் கசிந்து நிற்கும்,
பச்சைப்பசேல் ஓர்பசும்புல் வெளி;
பசுக்கள், ''மொஞ்சு மொஞ்'' சென்று
மூர்சங்கு வாசிக்கும்!

கண்ணு மரநிழற்கீழ்,
கண்ணுடி நீர்ச்சுனைகள்!
வண்ணார்... துணிவெளுத்து
வாட்டுவார் வெள்வெயிலில்.

‘‘வாழ்வுதேன்!’’ என்றூரில்
வாழ்ந்து, முடிந்து, புதுவாழ்வை அறிய
வருவோர்க்கோர் தத்துவம் போல்
வேம்பொன்று
பேய்க்காற்றின் வேகத்திற் கீடுதந்து
கூம்பிக், குடுமி கலைந்து வரவேற்கும்!
முட்பற்றை ஒன்றடியை
மூடி வளர்ந்திருக்கும்.

குட்டைப் பேய்
வேம்பில் குதித்தேறும் ஏணிகள்போல்
பற்றையைப் பற்றிப்
படரும் பசும்பிரண்டை!

தெற்கில்,
கருமை திரண்ட மணல் திட்டில்,
ஊர்க்காரரர் கூடி
உழுது, எருவடைத்து,
போர்க் கோலம் பூண்டு
பொழுதெல்லாம் பாடுபட்டுக்
கொத்திப் பரவி,
நெடுங் கோட்டில் குழிவெட்டி . . .
கத்தரிபோன்ற சிலகாய்கறிகள்
நட்டார்கள்!

கண்ணுக்கழகு
சுடுகாட்டு மண்ணிலும் கண்டு
மகிழ்ந்தார்கள்; விண்ணர்கள்!
பசையற்ற மண்ணில் பசுமைபடைத்தும்,
வசையற்ற வாழ்வின்
வழியில் தொடர்ந்தார்கள்!

மாட்டெருவை உண்டு, மடுநீர்குடித்த,
பயிர்க் காட்டில்
பயன்விளேதல் கண்டார்கள்; உண்டார்கள்!

நாட்கள் சிலபோய் நகர,பயிர்
காமவேட்கை வெதுப்பில் வெதும்பி,
நிறம் பெயர்ந்து,
பூவும் தளிரும் புதுக்கிளேயும் தோன்ருமல்,
பாவம்
பயலேநோய்ப் பாவையராய் மாறின!
பின்,
சாவாய்க் கனவாய்ச் சருகாய்
உதிர்ந்தன!

கூவும் குயில், வசந்தம் கொண்டுவர,
ஊரெல்லாம்
பூவாகப் பூத்துப் பொலியும் பொழுதில்,
உழவர் புதிய உயிர்பெற் றெழுந்தார்!

இளேயான் ஒருவன்
இறந்தாணும் என்று,
வழமைப்படியே, ஊர்வந்திருந்து
வாய்க்கரிசி இட்டதிடுகாட்டில்;
என்பதையும் எண்ணு து
தொட்டார் உழவர் தொழில்;
தொடர்ந்து முன்னேற
வையத்தின் வாழ்வாம் பயிரை
வளர்த்தெடுத்து
உய்ய உழைப்பார் உயிர்!

*1965*

## பனிப்பாலை

பனிமழையும் குளிர்காற்றும்
பாதையெல்லாம் சவசவப்பு
இனியனவாய் எதுவுமிலா
இருள் தூங்கும் பனிப்பாலை!
தனிமையிலே வழிநடக்கும்
இளவயதின் வழிப்போக்கன்
உனை வருத்தச் செய்திடலாம்!
ஒருகல், மேல் போவாயேல் ..

குன்றிரண்டின் நேர்கீழே
குளிர்காய்ந்து செல்லஇடம்
ஒன்றுளது; தேடிப்பார்
ஓடிநட போய்விடலாம்!

பள்ளத்தை கண்டுபிடி;
சாம்பரினைத் தட்டிவிடு
உள்விட்டுன் கைத்தடியால்
உராய்ந்து கிளறிப்பார்!
துள்ளுகிற நாய் நாக்கில்
கொள்ளிகளை அள்ளியெறி!
பள்ளமெலாம் சிவந்தெரியும்
பனிக்குளிரும் தீர்ந்துவிடும்!

வழிப்போக்கர் — பனிஇரவின்
வாதையினைப் போக்குதற்கு
குளிர்காயும் குளிர்நெருப்பின்
அருகினிலே, தரியாத
வழிப்போக்கர் — மிகச்சிலரே
வந்து சென்றார் இவ்வழியே.
வழிப்போக்கர் மிகப்பலபேர்
இனிமேலும் வரக்கூடும்! ..

என்பதற்காய்க் குழிநெருப்பை
மூட்டிவிட்டே போவார்கள்
என்பதனால் என்றென்றும்
இந்த நெருப் பெரிந்திருக்கும்.
அன்பு மன ஆழ்குழியுள்
அமைந்தடங்கி ஒளிர்வது போல்
இந்த நெருப் பிக்குழியுள்
எந்நாளும் அவியாது!

இன்று நீ குளிர்காயும்
இச்சிவந்த குளிர்நெருப்பில்
என்றேனும் இனும்ஒருவன்
குளிர்காய நேர்ந்திடலாம்

உன்போலவே, அவனும்
குழிநெருப்பை வளர்த்திடலாம்
முன்னொருகால் ஓர்மனிதன்
மூட்டிவைத்தான் இந்நெருப்பை,
கல்லோடு கல்பொருத்திக்
கடைந்து கனகாலமெலாம்
தொல்லைபல பட்டலுத்தும்,
தோல்வி பல கண்டு கண்டும்,
எல்லையற்ற தன்னுழைப்பு
யாவினையும் தோற்றீற்றில்
எல்லோரும் குளிர்காய
இந்நெருப்பை மூட்டிவைத்தான்!

'நாளை வர இருக்கின்ற
ஏழை வழிப்போக்கன், வரும்
வேளைவரை குளிக்குள்ளே
நெருப்பிருக்க மாட்டாது!
வாழவென்று வருவோனை
வருத்துமிந்தக் குளிர்பாலை
ஊழென்ற காரணத்தால்
உண்டுறுஞ்சச் சம்மதியேன்!'

'கம்பளிகள், சப்பாத்து,
காலுறைகள் இருக்குமெனும்
நம்பிக்கை கிடையாது,
நாளேவரும் மனிதனிடம்!
அம்மம்மா கொடிய பனி!
அவன் மிகவும் துயர்படலாம்!
அம்மனிதன் சாவதனை
சம்மதிக்க முடியாது!

ஆகையினுல்...இந்த நெருப்
பணையாமல் எரிந்திருக்க
ஆகுதியாய்த், தன்னையே
அர்ப்பணித்தான் அம்மனிதன்!

போகின்ற வழிப்போக்கர்
குளிர்காய்ந்து, தம்சுமைகள்,
'சோக நெருப் பெரிக! எனச்
சொல்லியதில் வீசுகிறுர்!

அவன் மூட்டும் தியாக நெருப்
பணையாமல் வளர்ந்திடல் பார்
அவன் மூட்டும் தியாக நெருப்
பணையாமல் நிமிர்ந்திடல் பார்!

*1966*

# சுமை

ஊரில் விளைகின்ற இளங்கீரைவகை, தேங்காய்,
உழுந்தரைக்கும் கல் திருகை, உலக்கை, பழவகைகள்
ஈரவெங்காயத்தொடு முள்ளங்கி, மற்றும்
எண்ணிறந்த காய்கறிகள், இடியப்பத்தட்டு
கார் உதிரிப்பாகங்கள், சைக்கிள், திறம் சுருட்டு,
காயவைத்த மூலிவகை, கயிறு, கருவாடு
பாரப்பா சந்தையிலே பரப்பியுள அந்தப்
பண்டங்கள் ஒன்றிரண்டா கண்டவிடமெங்கும்!

பூமிக்குள் விளைந்த பலா, புளுக்கொடியல், குட்டான்,
பொன்னணிகள், பன்தட்டுப் பாய்கூடை சுளகு,
ஆமையறுக்கின்றார்கள், மற்றொரு பால் கோழி
அறுக்கின்றார்; மாடாடும் உரிக்கின்றார் மறவர்!
மாமிசங்கள் மச்சங்கள் தாம்மலிவென் பார்போல்
மக்களுக்கும் ஈக்களுக்கும் மல்யுத்தம், தத்தம்
சாமிக்குச் செய்வதற்கும் சாமான்கள் தேடும்
சனத்தைப்பார்! இடமில்லைச் சந்தை பெருங்கூட்டம்!

கோயிலுக்கு போகவென்று வந்தவர்கள் நாங்கள்,
கொண்டு வரவில்லையொரு காசேனும் கையில்!
ஆயினுமிச் சந்தையினை ஊடறுக்கும் போதில்
ஆசையலை மோதுவதை யார்மறுத்தல் கூடும்;
தாயொருத்தி போகவிங்கு சந்தையிலே வாங்கத்
தக்க பொருள் ஏராளம் காசுமட்டும் இருந்தால்..!
வாயிலெல்லாம் விளம்பரமே வந்து செவி மோதும்,
வாங்குதற்கோ பணமில்லை! வாதம்பி போதும்

காசுகொண்டு வந்திருந்தால், கட்டாயம் நாமும்
காலத்தை சந்தையிலே கழித்திருப்போம் வீணாய்
பூசைக்குத் தாமதமாய்ப் போயிருப்போம் கதவைப்
பூட்டியபின் வீட்டுக்குப் போயிருப்பார் ஐயர்!
ஆசைகளுக் கலையாமல், வீசியகையோடு
ஆலயத்தில் ஆண்டவனைப் பூசித்தோம் நேரில்
காசு கொண்டுவந்தவர்கள் தோள்களிலே சுமைகள்
காணுகிறோம் எம்கையில் தூசுகிடையாது!

*1966*

# வில்லன்கள்!

மனையாளின் தோழி, மகவீன்
மருத்துவமனையின் ஒருபால்,
நம் வண்டி நிறுத்துகிறோம்,
சுத்தம் சுமந்து,
சுவர்க்கம் எனத் துலங்கும்
முற்றத்தினிலே நடந்து,
திரும்பி,
மறுபக்கத்தில் ஓடும்
பளிங்கன்ன திண்ணையிலே புக்கோம்
ஒவ்வொன்றும் புதிய விளம்பரங்கள்!

செத்தவர்தள்,
இன்றுவந்து சேர்ந்தவர்கள்,
கூடுகளைச் சுத்தப்படுத்திச்
சுகத்தோடு மீண்டவர்கள்!
இத்தனைபேர்
இத்தனைபேர்
இத்தனைபேர் என்றெழுதி...
மொத்தக் கணக்கும் முடித்த
அறிவித்தல்!

இல்லத்தரசி இடையை
வளைத்த படி
செல்லத் தடையாகச் சில்லறைப்
பொட்டலங்கள் கையில்
அவளோ...
தன் கைப்பை விசுக்கிக்
கதையோடும் போகின்றாள்.
ஒவ்வோர் பெரிய
வளைவில் நடக்கையிலும்
ஒவ்வோர் பிரசங்கம்;
ஒவ்வொரு நோய்பற்றி!

அடேய்...இவ்வளவு கற்றவளா
என்மனையாள்...! நான்...?
மடையன்
அவ்வளவில் விட்டாளா...?
'அத்தான்...! அதோ... அவர்கள்
புற்றுநோய் முற்றிப்
புழுத்த சனம்!
ஆண்டவரே
இற்றை நாள்மட்டும் இலை;
இனியும் இப்படிநோய் பற்றவிடேல்! என்றும்
பணிந்தாள்; கடவுளிடம்!

'கற்றவர்கள் பேசும் கதையா இது.?
என்றேன்.
'குற்றமென்ன கண்டென்னை கோபித்தீர் ..?'
என்றவளைச், சற்றே நிறுத்திச் சலித்தேன்
அடியம்மேய்!
''நோயென்றால்...
தீதான நுண்கிருமி
நம்முடம்பில் பாய்விரித்தல்.''
என்று பகர்ந்தாய் சிறிதேமுன்!
வாய்மை, எனின் ..
இந்த வையத்து மானிடர்போல்...
'நல்லாரும், பொல்லாரும் என்றே
கிருமிகளில் இல்லை!
எல்லாம் ஒன்றே. இயற்கை
மரணமெனும்
நல்லதொரு சாந்திநிறை
மாளிகையில்
நாம் தோற்கும் வில்லன்கள்
என்றேன்

விழுந்து சிரித்தவளோ...
பொல்லாத ஆளையா போம்
என்றாள்
போகின்றோம்.

*1964*

## சுவடு

அரசினர்தம் பெயரோடு
வசதிகளும் அனந்தமுள வைத்ய சாலை
பிரசவிக்கும் அறையின்முன்
விருந்தையிலே, பேய்வரவும் பெரிதும் அஞ்சும்
இரவில், நான் தனியாக
இருப்பதுவும் நடப்பதுவும் இரண்டும் கெட்டு
இரைந்தழுதும் விரைந்தோடா
மணிக்கூண்டின் இதயமென இழுவைப்பட்டேன்.

'வெண்புரு ஒரு நாளும்
எமன்தூது கொண்டுவரல் இயலா' தென்றென்
நண்பனொரு முறைசொன்ன
ஞாபகமாய் ஓடிவரும் 'நர்ஸை' நோக்கி
என்புரு என்ன பெற்ருள்.
இனியாளா? பாண்டியனு? என்றேன். மெல்ல
ஒன்றுமிலைத் திருவாளர்,
உமையுள்ளே தேவையென்ருர்; ஓடும்' என்ருள்.

அவ்வளவில் அபசகுணம்
ஏதேனும் அமைவதுவாய் அறியேன் ஆயின்
எவ்வளவோ ரகசியங்கள்
உலகத்தில்! எழுந்துள்ளே ஓடி வந்தால்,
கொவ்வையிதழ், சாம்பற்பூ
சணியாக நீகிடந்து குமுறும் காட்சி!
இவ்வளவில் ஏதேனும்...?
இறைவா! நாம்இளங்குடும்பம் என்றே நொந்தேன்.

ஆதூரம் வழிந்தோடும்
அனற்கொழுந்து விரல்களினுல், 'அத்தான்' என்று
காதோடும் கதை சொன்னுய்,
கவிழ்ந்துன்மேல் எனதுமுகம்காட்டி நின்றேன்.
'ஈதோ நம் இனியாள்! நான்
இனிப்பிழைத்தல் இலே' யென்ருய்! இல்லேஇல்லே
ஏதேதோ பேசாதே...
இனியாய்! நம் முதற்குழவி இதுவே அன்றே!

தாலியினைக் கழற்றியென்றன்
குடல்பிடுங்கித் தருவதுபோல் தந்தாய் கையில்.
பாலியத்தில் தொடங்கி, இந்தப்
பந்தமுறும் மட்டிலும்நீ பாராப்பார்வை
வேலினும் போர் விழியாலே
விளைத்தாய் பின்வேட்கை யோடென்கைகள் பற்றி
நாலிரண்டு துண்டாகி
நண்டாகிப் போம்வாறு நசித்தாய், ஆமாம்,...

முன்பொருகால், முதலிரவு;
முனைப்புற்ற உணர்வலேயில் முழ்கிநின்ற
என்னிடையே கிடப்பதற்கு
மிகநாணி எழுந்தோட, எழுந்துன் கையைப்
பின்புறமாய்ப் பிடித்தபிடி
பெரும்பிடிதான்! அதற்காகப் பெண்ணே, இன்று
உன்னுடைய வேட்கையெலாம்
ஒருபிடியாய், ஒடுங்கியதோ! ஓ நான்கண்டேன்

கண்மணி! 'நம்குழந்தைமிகக்
கவனமுங்கள் கண்போலும் காப்பீர்' என்ருய்,
உன்னுடைய நெடும்பயணச்
சுவட்டினையென் உயிராக வளர்ப்பேன், ஆனுல்
உன்மகளும் உனைப்போல
ஒருவனது மடியிலுயிர் விடுவாளாமேல்...
என்னகருத் தோடிதனைச்
சொன்னுயோ? இனியாள்! வாமகளே போவோம்.

*1964*

# போக்கு

ஊரிலே பறை மேளம் ஒலித்தது
உண்மை ஒருயிர் போயது. அவ்வுயிர்...
ஆரின் பொய்யுடல் கொண்டிங்கு வாழ்ந்தது?
அறியும் ஆசை விடையைத் தெரிந்தது.
'பார்வதீ'யெனும் பாட்டி உறவினள்
பாவம்! நீண்ட படுக்கையில் நோயுடன்
ஆறுதிங்கள் நொடிந்து கிடந்தனள்
ஐய கோ ஒரு பொய்யுல கம்மிது.

ஒருமகன் அவள் அருகிருந்து கை
ஓங்கி ஓங்கித் தலையினில் மோதியும்
பொருமி என்ன பயன்? ஒன்றுமில்லை! ஆம்
போன யாரும் திரும்பி வந்தார்களா?
மறுகணம் பறை சேவிக்க வந்தது,
மரண ஓலம்ஊர் எங்கும் புகுந்தது,
உறவினர்க் கெங்கும் ஓலை பறந்தது,
ஊரும் வாசலில் ஒன்று திரண்டது.

கடமைக் காகச் சிலர்வந்து போயினர்,
காசுக் காகவும் காதலுக் காகவும்
உடைமக் கான உறுதியைத் தேடவும்
ஒப்புக் காக ஒருசொல் உதிர்க்கவும்
சுடலை ஞானங்கள் பேசுதற் காகவும்
சொந்தக் கந்தல் உதறுதற் காகவும்
கடலைப் போலங்கு வந்து நிறைந்தனர்!
கோப்பி வெற்றிலை பாக்கை அருந்தினர்.

மற்றப் பானங்களும் சில வேளையில்
மறைவில் வைத்து வழங்கவும்பட்டன!
சற்றுநேரத்தில் பாடை முடிந்தது.
சரி சரீயினிச் சாய்ந்த பொழுதுதான்;
சுற்றுபாயினைத், தூக்கிவை பாடையில்!
சுறுசுறுப்பும் துரிதமும் சேர்ந்தன.
கற்று நெஞ்சுகல் லாகிய பேர்களும்
கண் கசிந்து கலங்குதல் கண்டனம்.

கிரியையாவும் முடிந்தன; தோள்களில்
கிழவிகட்டை நடக்குது பாரமாய்
உரிய ஊரில்விடைபெறும் நோக்கொடும்
ஊர் நடந்ததே ஊமையாய்; ஓர்சில
பெரியபுள்ளிகள் தாம் கதைபேசினர்.
பேதையர்க்கவை ஏன்?பெருந்தத்துவம்.
வெறுமையான வெளி; அதில் பாடையை
வேறும் நால்வர் கைபற்றி இறக்கினர்.

எட்டடிச்சதை போனது பூமியில்
எங்கள் பார்வதிப் பாட்டி உட்போந்தனள்
''பட்டுப் போ''என்று கூறிஅம்பட்டனுல்
பங்குபோட்ட கடைசி அரிசியை
இட்டனர் அவள்வாயிடை; கொள்ளியை
ஏந்திநீர் இறைத்தபின் சென்னியில்
முட்டியை உடைத்தான்மகன் அத்துடன்
முடிந்ததாகதை? மூச்சுவிடுகிறோம்.

பாட்டி இந்த ஊரில்மிகப் பணக்காரி;
மகனிடத்தே பாசக்காரி
கேட்ட வற்றைக் கேட்டவுடன் கேட்டபடி
வழங்கிய இக்கிழவிக்காக
காட்டிலொரு சமாதியினைக் கட்டிவைத்தால் என்ன?
பிறர்காணப்பேரும்
போட்டவளின் பிறப்பிறப்புக் குறிப்புகளும்
முகப்பினிலே பொறித்தான் மைந்தன்.

நள்ளிரவு சுடலையிலே நரியொன்று
பிரசித்தம் நடத்த, பூமி
உள்ளிருந்து, மாண்டவர்கள் எல்லோரும்
சவக்குழியை உடைத்துக்கொண்டு
கள்ளநரியாருரைத்த 'கவுண்மேந்துக்'
கட்டளையைக் காதில் வாங்கி.
உள்ளத்தே பதித்தார்கள்; ஒவ்வொருவர்
முகத்தினிலும் உணர்ச்சிப் பொங்கல்

''இன்னொருத்தி புதிதாக எம்முலகம்
சேர்ந்துள்ளாள் இவளுக்காக
மண்டபமொன் றெழுந்துளது மயானத்தில்!
மகனும் ஓர்மனிதப்பூச்சி,
இன்றுவரை இவ்வூரிலிருந்து எவரேனும்
புரியாத ஈனம்செய்தான்!
கண்டிக்க நடக்கு மொரு பொதுக்கூட்டம்;
யாபேரும் கலந்துகொள்வீர்''

'காடேறி' அமைச்சர்சபை விடுத்திட்ட
கட்டளையைக் காலமானோர்
சூடேறும் படியாகச் சொல்லிவிட்டு
நரியண்ணர் சுதியில் கத்த
ஓடோடி, மயானத்தில் உறங்குபவர்
எல்லோரும் ஒன்று சேர்ந்தார்!
மேடேறி, குடியேற்ற மந்திரியாம்
வயிரவனார் முழங்கு கின்றார்!

'ஆரிந்தப் பணக்காரி? அரசாங்க
வரியென்ற போர்வைக்குள்ளே
பாரினிலே பலசரக்கு வியாபாரம்
பண்ணுவதாய் 'பாஷை'பேசி
ஊரிலுள்ளோர் பொருளை யெலாம் உறிஞ்சியதில்
உல்லாச உலகம் கண்ட
பேராசைக் காரனுக்கு மனையாளோ!
பிணத்துக்கும் பெருமைச்சின்னம்!'

சாக்கடையில், மலம் நாறும், சகதிகளில்
தெருவோரம் சந்துபொந்தில்,
வாழ்க்கையெனும் சுவாலையிலே வறுமையெனும்
சட்டிக்குள் வதங்கும்மக்கள்
கூக்குரலைக் கேட்காது கோளாற்றைப்
போக்காது கோயில் கட்டித்
தீக்கடைந்து விளையாடித் தின்றலுத்த
தீயவளோ தெரியவில்லை!

'பசியென்று வந்தவரைப் புசியென்று
கூறுமல் படலைக்குள்ளே
'உசி'யென்று மிரட்டி, பின் நாய் கவனப்
பலகையையும் ஒருக்கால் காட்டி
'அசிங்கமிவர் காலடி நம் அரண்மனையில்
படுதல்' என அருவருக்கும்
பிசுங்கல் மனம் படைத்ததொரு பெரியவளோ
இவளுக்கேன் பெருமைச் சின்னம்

கட்டியுள்ள கந்தலிலே கண்ணறைகள்,
அதற்குள்தம் கண்ணைப்பாச்சி
சட்டைக்குள் விம்மியெழும் சங்குகளை
அனுபவிக்கும் 'சான்ஞேர்'ராகி
பட்டுடையும் நைலோனும் அல்லாமல்
வேறெந்த பருத்தி நூலும்
தொட்டறியாச் சீமான்கள் தொன்மரபில்
வந்தவளோ துடுக்குக் காரி!

கல்விபெற வசதியற்று கலங்குகின்ற
ஆத்மாவை கவனிக்காது
செல்லரித்துத் தின்னுகிற தேகத்தை
வளர்ப்பதற்கே தின்று தின்று
புல்லத்தர், வாசனைகள் பொதிந்துள்ள
தைலங்கள் பூசிப் பூசி
செல்வத்தை அனுபவித்த சீமாட்டியோ
இந்தச் செருக்குக்காரி!

'சாதிநூ ருயிரங்கள் சரிக்கட்டி,
நாமுயர்ந்த சாதியென்று
காதினிக்கப் பேசி, 'இதுகடவுளர்தம்
நீதியிலே கருணைமிக்க
நீதி'யென மெலியாரை நிஷ்டூரம்
பண்ணுகிற நினைவு கொண்ட
சாதிக்கு வாரீசாய் ஜனனித்த
பத்தினியோ சரசக் காரி!'

'பேராசை வெறிகொண்டு பிறர் நாட்டின்
எல்லையில் தம் படை பெருக்கி
போராடி, மனிதர்களைப் புழுவாகப்
பலியிட்டு புகழ் சமைத்த
ஊராளும் நினைவோடே உலகசமா
தானத்தை உருக்குலைக்கும்
சீராளர் பரம் பரையின் செல்வியோ
இங்குறங்கும் சிலுக்குக் காரி!

ஆராக இருந்தாலென்? எம்முலகின்
சமரசத்தை அழிக்க வந்தால்
போராட வேண்டியதெம் பொறுப்பன்றோ!
எல்லோரும் புறப்படுங்கள்!
தீர்மானம் இதுவென்று வயிரவனுர்
சபையினிலே தீயைக் கக்கி
பார்வதியின் சமாதியினைப் பார்த்துத்தன்
ஆத்திரத்தைப் பல்லில் தீர்த்தார்.

'விண்வெளி சென்றவள் யாரோ
பழைய விதி துரத்த
புண்ணிய பூமி புகுந்தனள் என்றே
பொறுத்திருந் தோம்
சண்டாளிக் கிந்தச் சமரச
பூமிச் சமாதியினை
உண்டாக்கி னை உடனே
நொறுக்குவம் உண்மையிதே!

என்று சபையில் இருந்தோர்
குமுறி எழுகையிலே
ஒன்றும் அறியா தவள் போலப்
பார்வதி ஓடிவந்து
நின்றுள் சபையின் நடுவே;
கை கூப்பி நிகழ்த்துகிறுள்,
என்றன் அருமைச் சகோதரர்காள்
உரை ஏற்றிடுவீர்!

மண்ஏமது நல்லுணவு மாளிகையும் அஃதே;
வீண்
எண்ணம் கவலேயிலே இல்லேயெனும் தொல்லேயிலே
சூரியனே எங்கள் சுகத்துக்கு வாய்ந்ததொரு
போர்வை;
சுடலேப் புளுதியெங்கள் பட்டாடை!
எல்லோர்க்கும் ஓர் உணவு
எல்லோருக்கும் ஓர் உடையே
எல்லோர்க்கும் ஓர் மனேயே
எல்லோர்க்கும் சாந்தியிங்கே

அண்ட வெளிக் கப்பாலும்
அப்பாலும் நம்முலகம்!
சண்டாளர் அண்டாச் சமரசத்தின் பூமியிதாம்;

இந்த உலகம் இனிய புது உலகம்
விந்தை உலகமிது வீண்பெருமை அற்றதென்று
சாவதற்கு முன்ஞலே சத்தியமாய் நானறியேன்
காவிவரும் போதந்தப் பாவியரும் கூறவில்லே
மன்னிப்பீர் என்றன் மகன் செய்த இச்செயலே
உண்மை அறியா உலகத்து வாழுகிற
பிள்ளே! தணிக பெருங்கோபம்;

வாருமென்பின்
நள்ளிரவே கட்டிடத்தை நானே உடைத்தெறிவேன்
அங்குநான் வாழ்வில் அனுபவித்த அத்தனையும்
உங்களது சொற்பொழிவில்
ஊறிவரக் கேட்டேன்! பொய்
கட்டுக்கதை யன்று; கண்முன் நடப்பவைகள்
'பட்டாங்கில் உள்ளபடி' யென்று
பாட்டி சொல்ல......

கூட்டத்தில் நின்றிருந்த கோடானு கோடிப்பேர்
கேட்டு மகிழ்ந்தார்; கிழவியினைத் தோள்களிலே
தூக்கி எடுத்தன்பு தூவிக் குதிக்கின்றார்!
தாக்கிச் சமாதி தகர்த் தெறியப் பட்டதங்கே!

ஆனாலும், பாட்டி மகன்
அன்பின் திறமறிவாள்
போனாலும்......ஈது புதுப் போக்கு!

***1964***

# தென்பொடு நட

என்ஞெடு நீவரால் முடியாது!
ஏனெனில் நீயொரு பிடிவாதம்!
கண்மணி உன்நடை காணுது.
கவிதையின் நடையினில் நாணுது,
என்ஞெடு தொடர்வதும் இயலாதோ?
இடையிடை ஓய்வதை முயலாதே!
உன்ஞெடு நான்வரல் அழகேதான்.
ஓமடி நீஎரி; உணர்வேன் யான்!
என்னிலும், ஒளியொடு நடைகொண்டோம்.
இருளிடை ஒருமுறை அடைவானேன்?

உன்எழில் நடையினி உதவாது
ஊர்வதை விடு நட மகிழ்வோடு!
பின்வரும் மனிதர்கள் வருவார்கள்;
பிழையிலை அவர்நடை! அடியேய் உன்
கண்படு தொலைவினில் அவரேது?
கடையுகம் அவர்தொலை! களையாது,
தென்பொடு நடகிளி; ஒளிவீடு,
தென்படு கின்றது தெரியாது?
அன்பொடு தொடர்பவர் அடையாமல்
ஆரடி அதனுளும் உறைவார்கள்?

*1966*

# விடைதாருங்கள்

மாணவ மணிகாள் தூய
மலர்களே! எனக்காய் வீணில்
ஏனழுகின்றீர்! உம்பால்
இருப்பதே விருப்பமா? முன்
போன என் உபாத்தியாயர்,
போம் பொழுதுமையே போல
நானழு ததுவும் உண்டு!
நயமுமுண் டழுவதாலே!

ஏனெனில் எங்கள் ஐயா
ஏசவே ஏசார் என்போல்!
ஆனந்தம் பிறந்ததோ, பின்
அவரும் எம்போலவாகி
கூனுவார் கிழவியாகி
குறிவைப்பார் வேடனாகி;
மானெனத் துள்ளிக், காட்டில்
மயிலாகி நடனம் செய்வார்!

பெரியையா கிழவனாகிப்
'பென்ச'னில் போக எங்கள்
அரிவரி ஐயா சுப்பர்,
அரிவரி வகுப்பை விட்டு
பெரியையா மேசை மீதில்
பிரம்போடு போய் உட்கார்ந்தார்!
பரிமளம் 'ரீச்சர்' அன்றெம்
பரிதாபம் போக்க வந்தாள்

சுப்பையா ஐயா கூடச்,
சுகவீன லீவில், தெற்கே,
விற்பனன் ஒருவன், வைத்திய
விந்தையை அறியப் போனுர்
அப்பொழுதான; காலி
ஆசனத் தென்னே, கந்தோர்
'அப்பொயிண்ட்' பண்ணிற்றப்பா!
ஆகையாற் பிரிய வேண்டும்

பதவியில் உயர்வு பெற்று உம்,
வாத்தியார் பிரியும் போது
எதற்காக அழுகின்றீர், என்
இனிய கண்மணிகாள்!
அதற்கென்ன...? நீங்கள் மட்டும்,
அரிவரி வகுப்பே என்றும்
சதமென இருப்பீரோ? மேல்
வகுப்பேற்றம் பெறவே செய்வீர்

புதியமாணவர்கள் கையில்,
புத்தகம் சிலேயேட்டோடும்
அதிர்வெடி அழுகையோடும்,
அரிவரி வகுப்பில் வந்து
குதிர்வர்! நீர் வேறு, வேறு
குறிக்கோளில் பிரிதல் ஈங்கு
விதியெனில்... விலக்க அன்பின்
விழிமழைக் காற்றல் ஏது?

அழுகையை நிறுத்தி, உங்கள்,
அரிவரி ஐயா நான் போம்
பொழுதிலே மகிழ்ச்சி பொங்கப்
புன்னகை அரும்பி, உம்மை
அழவழ அடித்த கையின்
அஞ்சலி ஏற்று, வெள்ளே
உளத்திஞல் விடைதாருங்கள்!
ஊமையாய் விடைதாருங்கள்!

1964

## துயில்

'இந்த உலகில்
இருந்தசில நாழிகையில்
எந்தச் சிறிய உயிரும்
என் ஹிம்சையினுல்
நொந்தறியா...
யாதும்எனே நொந்ததிலே' என்கின்ற
அந்த இனிய நினேவாம்...
அலங்கிர்தத் தாலாட்டுக்(கு)
என்இதயம் தந்து ..
பழம் பிசைந்த
பால்கொஞ்சம் ஊட்டப்
பருகி, அதைத் தொடர்ந்து
கால்நீட்டிப் போர்த்தேன், என்
கம்பளியால்.

தாலாட்டில் மாலாகி
என்னே மறந்து துயில்கையில்...வீண்
ஒப்பாரி வைத்திங்கு
உலகத்தைக் கூட்டாதே!

அப்பால் நடப்பை அறிவேன்
அதை ரசிக்க
இப்பயலே மீண்டும்
எழுப்பித் தொலேக்காதே!
தப்பாக எண்ணுதே
தாழ்ப்பாளேப் பூட்டிவிடு!

மேளங்கள் கொட்டி, என்றன்
மேட்டிமையைக் காட்டாதே!
தாளம் மொழிந்து
நடிக்காதே! என்பயண
நீள வழிக்கு நில
பாவாடைதூவாதே!
ஆழம் அகலம்
அளந்தெதுவும் பேசாதே!

மோனத்தில் உன்உணர்வை மொண்டு
இதயநெடும் வானத்தில்
நீ தீட்டி வைத்திருக்கும்
என்னுடைய தீன உருவை
முழுதும் வடித்தெடுத்து
மீன்விழியில் இட்டு விளக்கேற்றி
தொட்டிலில் நம்
காவியத்தைப் பாடிக்களி!

பின் இயற்கையொடும்
சாவியலே எள்ளிச்சிரி.

*1964*

# வழி



**தமிழ்:**

யாரடா தம்பி நீவிர்?
நம்கடைக் குட்டிப் பையல்
பாரதி சாயலோடென்
பாங்கிலே வந்தீர்...

**புலவர் இருவர்:**

தாயைச், சீர்செய வந்து நிற்கும்
செஞ்சொல்ஏர் உழவர் யாங்கள்

**தமிழ்:**

பேரென்ன? பெரியோன் சொல்க
பின்சொல்க இளையோன் நீயும்

**அறவழிப்புலவர்:**

சீர்தளை அறியார் ஆழ்ந்த
சிந்தனை சிறிது மில்லார்
பேர்பெற நினைந்து செய்யுள்
பிண்டமே செய்யும் பித்தர்
பாரதிபெயரை ஏதோ
பட்டத்துப் பின்வால் போலக்
கோரமாய்க் கட்டிக் கொண்டு
கொலைசெயக் கண்டேன்; தாயே!

சாவதா நீ, இப் பொல்லா
சகுனிகள் சூதாட்டத்தால்?
நோவதா இலக்கியங்கள்?
நொய்வதா மரபும் மாண்பும்?
காவல்செய் துன்னை என்றும்
கன்னியாய் வாழச் செய்யும்
ஆவலால் வந்தேன்; என்பேர்
'அறவழிப்புலவன்' அம்மா.

**தமிழ்:**
வந்தனம் மகனே! நீயோர்
வரகவி போலும்! யாப்பும்
முந்தையர் வழியும் தேர்ந்த
மொழியறி புலவன் போலும்!
சிந்தைக்கும் செவிக்கும் சேர்த்துச்
செப்புக கவிதை கேட்போம்.

**அறவழிப்புலவர்:**
கந்தனைத் தொழுதேன்; ஈங்குன்
கால்களைத் தொழுதேன் அம்மா!

## இரவின் நோய்

புனமுருக் குதிர்த்த புன்புரை மலராம்
தினவூர் பசலை பரந்து, திருவுறை
முன்றிலே வெள்ளை முறுவலை நாணிக்
குன்றி மணியார் கொழுமணல் கரந்த
நிலவுமிழ் அழகின் நித்திலம் பொறுக்கி
தலைவாயில் குவித்துத் தெருவினி லாடுமென்
மதலை, நின்தலைவன் மலர்செஞ் சீறடி
புதைய நீங்குமுன் பொலிவழி பசப்பே!
'முடிவில் முதல்வன் முடியினைப் பிரமன்
முடுகினன்' எனப்பொய்க் கரிபகர் முள்ளுறு
தாழையின் றிழிந்த மடலமர்ந் தேங்குமிவ்
வேழையும் நீங்குவன் கொல்லோ?.. இளைய
காலையிற் பரிதிக் கலைஞன் கருநிற
வேலைக்குமரியின் வீங்கலைக் கொங்கை
மீதினிற் பதிக்கும் ஏதில் நகக்குறி
கண்டெமை நினைந்து காமந் துடுப்பாய்
வெண்டிரை மகர வேலையைக் குடைந்து,
பறந்து புலம்பன் பாக்கம் வந்தே
இறங்குவாராயின் நீங்கும் இன்னே
சுடருமென் னிளமுலை பசப்ப
இடர்செயும் இந்த இரவின் நோயே!

## விரைக வேசியர் மனைக்கே

எந்தை நமது வதுவை ஞான்று
தந்ததீம் பழனம் விளைந்தும் வெறுத்து
உந்திச் சுழியின் ஒரு தண்டினிலே
அந்திக்கமலம், ஆம்பல் குவளை
மண்டிய காதல் ஒண்டொடிப்பரத்தை
வண்டலின் வயலைக்கண்டு, சிலநாள்
உழாமையின் பாசி படர்ந்தநின் ஏரால்
உழுதுநீர் பாய்ச்சி உழக்கவும் தெறித்த
சேறுமார்பிடைச் சேரவும், அதனால்
நாறும் நறுவிரை நம்மில் நிறைந்து
பொங்கவும் ஒன்றும் பொய்யறி யாய்போல்
எங்கெய்தினையோ? இதுவரை எனக்காய்
உறுதுணை விழித்து, ஏணையில் மகன்துயில்
துறந்தெழுங் காலை தூரமென்றெண்ணி
உதையினும் உதைகுவன் அதனால்
விரைகநின் பிரிய வேசியர் மனைக்கே!

## அணுகுண்டு வெடித்தது

திமிரெழக் கொம்பினில் மண்பெயர் எருதென
'அமரிக்கை' யற்ற அணுவறி புலவோர்
அணு-ஜல வாயுவின் திறலறி பொருட்டு
குணதிசைக் கடலில் குண்டுகள் பொழிய
விண்பட வெடித்து விரிந்த கரும்புகை
கண்டுகார் வந்ததாய்க் கணிகையாம் முல்லையும்
'களுக்கென' நகைத்துக் குலுக்கி மினுக்குவள்
பழுக்கக் காய்ச்சிய குறிசுடு கோல்படத்
துடித்துத் துடித்துத் துள்ளும் முயல்போல்
அடித்துக் கெள்ளும் நெஞ்சை
ஆற்றிட நாளையே அவர்வரு வாரே.

## கொழும்பு வேண்டாம்!

கொங்கையில் கழன்ற சங்கார் எயிறுகள்
செங்கையால் தடவக் குங்குமங் கொதியாக்
கன்னத்துருளும் கண்ணின் துளிகள்
அன்ன ரயிலி'ன் சிவப்பு விளக்குகள்
மின்னி மின்னி நின்னை ''ஊர்போ''
என்னவுங்கேளா தேகிடத் துணிந்தனை
மொழிவெறி யென்னு மிழிவுறு வாளில்
எளியார் உயிரையும் வழியில் பறித்து
கவரும் பொருளில் கள்ளுண் பொய்மைக்
கவருடுகள்ளர்; கனிவொன் றறியார்
செத்தவன் பிணத்திலும் குத்திக் குடையும்
பித்தர் வதியும் பெருஞ்சுரம் கடந்து
உத்தியோகம் உவந்தனை
கொற்றவ தவிர்கநின் கொழும்புச் செலவே!

## அட்டைக்கடிக்கே அஞ்சுவள்!

மாவலி வழிந்து மலிவளம் சுரக்கத்
தேயிலை 'றப்பர்' செழிக்கும் வெற்ப!
அயலவர் நின்னையும் தன்னையும் சுட்டி
'லயினெலாம்' தூற்றும் அலர்க்கிவள் அஞ்சாள்
வரையின் நிவந்த பனிப்புகார் சூழ்ந்து
விரைவினைத் தடுக்கவும்வேயின் பிளந்த
கட்டைகள் காலில் இடறவும் அஞ்சா
'நள்'ளென்யாமம் நஞ்சிருள் புகுந்து
கள்ளன்போலும் கரந்துவந் தனையால்
உயிரினும் இவள்பால் உனக்குறு காமம்
பெரிதே! யாயினும் பேதை
அட்டைக்கடிக்கே அஞ்சுவள் மன்னே!

## இருந்தும் இரத்தல்

மரபைப் புதைத்துப்பொய் மாய்மாலம் பண்ணத்
தரமற்ற தில்லைத்தமிழ்.

ஆறு புகுந்தேநீள் ஆழி நிறைவதுவாய்க்
கூறுவதில் உண்டே குறை

வீட்டிற் புதிய விலைஉயர்ந்த 'கார்' இருக்க
நீட்டுநடை கொள்வாயோ நீ

தாய்ப்பால் விடுத்துத் தகரப்பால் ஊட்டுவதால்
சேய்க்கென்ன லாபமெனச் செப்பு.

கடலன்ன செல்வம்—கவிதைப்பொன் வைத்து
'இடு'வென் றிரப்பாயோ? ஏன்?

இலக்கணத்தைக் கையாள ஏலார் வசனம்
புதுக் கவிதை யாமோ புகல்?

காலால் நடப்போனைக் "கையில் தவழ்" என்னும்
ஏலாமை ஏனோ எமக்கு?

## யாப்பு வாழ்க!

பண்தோய் சந்தம் பயின்றோட
பல்வே றணிகள் நீசூடி
வண்ணம் நூறு தாங்கிவழி
வந்தாய் வாழி யாப்பே நீ.
வண்ணம் நூறு தாங்கிவழி
வந்ததெல்லாம் செந்தமிழின்
கன்னித்தன்மை அழியாமல்
காப்பாய் வாழி யாப்பே நீ!

பண்டைம் பூட்டன் அகத்தியனுர்
படித்து ஆய்ந்து புதிதாய் நூல்
கண்டான்; அதற்கும் முன்பாட்டில்
கலந்தாய் வாழி யாப்பே நீ!
கண்டான் அதற்கும் முன்பாட்டில்
கலந்தா யேனும் கவிதையிலே
இன்றுவரையும் மரபோச்சி
இருந்தாய் வாழி யாப்பே நீ!

தொகுத்துச் சென்ருன் தொல்காப்யன்
தொடர்ந்து வந்த பல்காப்யன்,
பகுத்துச் சொன்னுன் அதனுலே
படர்ந்தாய் வாழி யாப்பேநீ!
பகுத்துச் சொன்னுன் அதனுலே
படர்ந்தாய் அவரைப் பின்பற்றி
வகுத்தார் காக்கை பாடினியார்
வாளர்ந்தாய் வாழி யாப்பேநீ!

காப்யன் வழியில் பாடினியார்
கண்டு போற்றப் பின் சமணர்
யாப்பார் உன்னைக் காரிகையாய்
நயந்தோம் வாழி யாப்பேநீ!
யாப்பார் உன்னைக் காரிகையாய்
நயந்தோம் எனினும் நாளெல்லாம்
மூப்பால் அழியா முதுசொத்தாய்
முகிழ்த்தாய் வாழி யாப்பேநீ!

## புதுமைப் படைப்பு

ஊருக்குள் யாவரும் பிள்ளைகள்
பெற்ருர் உறுப்பமைய
பேருக் கெனினும் ஒரு பிள்ளை
தாங்களும் பெற்றெடுக்க
ஆருக் குலகினில் ஆசை
இலையாம்? அதைவிடுவோம்;
ஆறுக்கும் சற்றே அதிகம்
திருமணம் ஆகியின்றே.

ஆதாமும் ஏவாள் அவளும்
பிறந்த அதுமுதலாய்
ஏதேனும், பிள்ளை பெறுவதில்
மாற்றம் இருந்ததுவோ?
பாதாதி கேசம் வரையில்
படைப்பில் பழமையால்
பூத உடலில் புதுமை
எதுவும் புகுந்த துண்டோ?

இதையுண ராமலென் இல்லாள்
மலடியென் றேசிவசைக்
கதைகள் பரப்புவ தன்றி
புதுமைக் கருத்தறியார்.
அதையெண்ணி ஏங்கி அழுதவள்
ஓர் நாள் அருகிலெய்திப்
புதையல் கிடைத்ததென் ருள்வயி
ஞேங்கிப் புடைத்ததுவே.

ஏழெட்டு மாதம் கழிந்தொரு
சாம இரவினிலே
''மாளட்டுமோ'' என இல்லாள்
புலம்பி மறதிசொல
வீழட்டு மென்றெரு பூசாரி
வெற்றிலை ஓதியதால்
பாழ்பட்ட பூமியில் பாவம்!
பிறந்ததெம் பாலகனே.

கறுப்புத்தான் பிள்ளை அதற்கென்ன?
கைகளும் காலுமில்லை
பொறுப்புத்தான் இம்மாதிரியோர்
புதுமை புவியினுக்கு
வெறுப்புத்தான் எங்களின்வீட்டில்
பழைய கிழங்களுக்கும்
உறுப்புத்தான் முக்கியமா? இதற்
குள்ளும்உயிருளதே

பிள்ளை பெருத மலடரென்
றேபிறர் பேசியெமை
எள்ளி நகைக்கா திருப்பதற்
கேனும் இருந்திடட்டும்!
பிள்ளையோ பிண்டமென் ருலும்
புதுமை பெரியதுதான்!
தள்ளி இரும்ஓய்! இடம்விட்டு
யானும் தகப்பனின்றே!

## புரவலர்

''கொய்து தலையைக் கொடுபோய் என் தம்பியவன்
கையிற் கொடுபொன் கனக்கவரும்
செய்''யென்று
கூறிக் குமணன் கொடுத்தான் உறைவாளை
ஆறிவிட்ட செய்தி அது; ஒருநாள்
காரைவிட்டு
வந்த கனவான் ''வசனத்தில் பாராட்டுத்
தந்தால் பிழைக்கும் தமிழ்மரபே
இந்தாரும்''
என்று குறிப்பும் எழுதிக்கொடுத்துவிட்டுச்
சென்ருர்; புதிதாய் திறக்கின்ற
பன்றி
இறைச்சிக் கடையை இனியனுர் வந்து
திறப்புவிழாச் செய்கின்ருர்; செல்வர்!
சிறப்புக்களைப்
பாட்டாகக் கட்டித்தான் பாராட்டவேண்டு''மெனக்
கேட்டார் அதற்கென்ன கிட்டடியில்
'மூட்'டு வரும்
பாடிக்கொடுத்தால் பணமேதும் வந்திடலாம்
வாடிக்கைக் காரருக்கே வந்தவுடன்
சோடிப்ப
தில்லை; எனினும் இதுநாளில் நம்பிழைப்போ
'டல்'லதனல் கொஞ்சம் ரசமாகச்
சொல்லுதற்குத்

தெண்டித்து நல்ல திறமாகப் பாடிவிட்டேன்!
அன்றைக்கே சென்றேன் அவரிடத்து
நன்றியொடும்
தந்தேன்; கவியைத் தடியால் அளந்துவிட்டு
''சந்தோஷம் மாஸ்டர்சரி'' யென்ருர்
அந்த
அமணன் தமையன் அடிமுட்டாள்! இந்தக்
''குமணன்'' கொடையே கொடை!

## அடுப்பும் விடுப்பும்

'எப்படிப் பிள்ளை திருவிழா வெல்லாம்
இருந்தது?' — ''வெண்கலம் பொருட்கள்
இப்பொழு தரசினர் ஏற்றிய வரியில்
ஏறின விலைதலை மேலே!''
''அப்படியா? பெரும் அக்ரமம்! அதுசரி...
அடுப்பிலே கறி... அதற்கிடவே
உப்பொரு கரண்டி தாமகள் கடனுய்
ஒன்பது கரண்டிஇத் துடனே!''

''அடுப்பிந்த நேரம் அணைந்துபோய்க்கிடக்கும்
அதைமறு படிகொளுத் துதற்கும்
நெருப்புவை இந்தப் பொச்சிமட் டைக்குள்
நேரமா யிற்றினி அவரும்...
முடுக்குவார் வந்து முணுமுணுப் புடன்! ஆ...
மூட்டவே இல்லையா அடுப்பு?
அடட டேய்! நீங்கள் கடையிலே எடுத்து
அருந்துதல் வழக்கமோ?'' — ''இல்லை''

''சுவரிலே பதித்த 'சுவிச்'சியை அழுத்தச்
சோறெலாம் கறியெலாம் சமைக்கும்!
அவசர மாகவும் ஆக்கிடும்! 'எலெக்றிக்'
அடுப்பிது தெரியுமோ ஆச்சி''
''சிவசிவா! என்ன புதுமைகள்!'' ''இறந்த
சீவனை எழுப்பவும் உலகில்
நவநவ ஆய்வுகள் நடக்கிற தாச்சி!''
''நான் வரு கிறேனடி மகளே!''

## அன்றும் இன்றும்

எவர்க்கும் யாம் மசிந்துகொடோம் இறைவனுரே
இருகண்கள் போதாது மூன்றும் கண்ணும்
தவக் கனலைச் சொரிந்தெம்மைச் சாடினாலும்
தமிழ் கொல்லும் திருப்பணியேல்
தாங்கோம்! தாங்கோம்!
உவக்கவொரு கவி, அழகு உண்மை நன்மை
உயர்யாப்பு அணிசந்தம் விளங்கச் செய்வார்
அவர்க்கே நாம் என்றென்றும் அடிமை யாகி
அன்பு செய்தே பேரின்பம் அடைகுவோமே!

மூப்பனுக்கே நாம்முதுகு சொறிவோம் ஏதும்
முண்டங்கள் பிண்டங்கள் படைத்தோமாகில்
காப்பதற்கே அவருள்ளார்; காலில் வீழ்ந்தால்
கம்பெடுத்துப் புதுமையென்று பறையடிப்பார்!
சாப்பாட்டுப் பாட்டுக்கே வாரா தேனும்
சரிபாதி பெருமையதில் அவர்க்கே! நாளும்
கூப்போட்டே இலக்கியத்தைக் குழப்பு மன்னர்
''கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினேமே!''

## முடிவும் முதலும்

முறியும் அண்டம் பொறியும் உயிர்கள் தலை மீதில்!
அறிவும் பொருளும் அணுகும் அமரில் எதுவெல்லும்?
எரியும் தணலில் அறிவின் கருவம் பொடியாகும்!
இறைவன் அதனை உடலில் தரியா நடமாடும்!
அறிவின் கருவம் அணுவின் துணையால் அழிவாக
நெறியிற் தவறிக் குறியும் சுடலைத் திசை பாலே
கிறுகும் பொழுதிக் கொடுமை எதிலே முடிவாகும்
மறுகால் புதிதாய் ஒருபேர் உலகம் உருவாகும்!

## பகைவிடுமினோ!

படையி னுலுமுல கடைய லாகுமெனும்
பண்பி லாதவர்கள் பட்டதும்
இடையி லேமசிந் தடிமை நாடுகொள
எண்ணு வீர்கள் பகை விடுமினோ!

'பண்பு என்பதுவும் அன்பு' என்றுநிதம்
பஞ்ச சீலமொழி நண்பனைக்
கொன்று தின்னவெறி கொண்டு நின்றுழலும்
'கொள்கையாளர்' பகை விடுமினோ!

எல்லை என்றுமொரு தொல்லை வந்தும்அறம்
எண்ணி வாழுமுயர் நண்பனைக்
'கொல்வ' மென்றுபடை கொண்டு கொண்டுகுவி
'கொள்கை யாளர்' பகை விடுமினோ!

## விந்தைப் புதுமை

காதில் வயிரத்தில் கம்மல், கழுத்தணிகள்
கோதில் நவமணிகள் கோத்தழகு
சூதற்ற
பொன்னும் மணியும் புனைந்து புதுமையுற
பொன்கொல்வான் செய்த புதிர்.

கையில் கனகமணி கக்கும் ஒளிவளைகள்
மெய்யில்வான் மின்னனைய மேகலையும்
செய்யமலர்ச்
சீறடியில் கொஞ்சும் சிலம்பு, அரைமுடியில்
தூறும் சதங்கைத் தொனி.

சீனர், விலைமதியாச் சிங்காரப் பட்டுடுத்து
வானக் கருமைவிழி மைதீட்டி
கூனுத
கொங்கையிலே தொய்யெழுதிக்
கூன்பிறையில் குங்குமம்வை
மங்கை முகம் செந்தா மரை

கண்டு பழித்துக் கருநாடகமிதென்று
கொண்டை அவிழ்த்துக் குழல்சிரைத்து
பண்டை
அணிகளைந்து சேலை அதுவும் உரிந்து
பிணியன்று காணும்! இதும் பெண்.

''நன்ருய் நிருவாணம் நாம்படைத்தோம் நாகரிகம்!
ஒன்ருய் நயப்பீர் உலகோரே''
என்று பொதுச்
சந்தையிலே காட்டிச் சனத்தை மயக்குவதோ
விந்தைப் புதுமை? விளம்பு!

## இலக்கியக் கோவில்

புலமை முற்றையும் போர்ப்பறை யாக்கவும்
விலையி லாத நிதியினைத் தூர்க்கவும்
'கொலையிலும் புதுக் கொள்கை' யென்ருர்க்கவும்
அலையும் அன்பர்கட் கேபகை யாங்களே!

சிந்தனையில் தெளிந்தகருஞ் சீமேந்தும்
கற்பனையாம் மணலும் சேர்த்து
உந்தியெழும் உணர்ச்சியெனும் நீர்பெய்து
குழைத்தெடுத்த உறுதிச் சாந்தில்
செந்தமிழின் யாப்புர்ணந்து செஞ்சொற்கல்
தேர்ந்துகவிக் கொத்தன் செய்யும்
விந்தைமிகும் கலைக்கோட்டம் இலக்கியமாய்
உலகத்தே விகசிக் கும்மே.

## தனித்துவம்

'அப்பனை அந்த வாறே
அச்சினில் அமைத்து வார்த்த
செப்பமே செப்ப'மென்று
செப்புகின் றார்கள் ஊரார்!
எப்படிக் கண்டார்? ஆமாம்
என்மகன் அழகன்! நானோ
கொப்பினில் தாவும் அந்தக்
குரங்கரில் கொஞ்சம் ஏற்றம்!

கண்களின் கனிவும், செய்ய
கன்னத்தின் குழிவும், நீண்ட
சொண்டெனும் மூக்கும், நெற்றிச்
சுருள்விழும் மயிரும், செவ்வாய்
வெண்தயிர்ச் சிரிப்பும், தங்க
விக்ரக உருவ வார்ப்பும்
கண்டெனும் மொழியும் எல்லாம்
கண்டவர் மனதை ஈர்க்கும்!

இத்தனை அழகு சொன்னேன்
இவற்றிலே எவையென் றாலும்
ஒத்ததாய் இல்லை யென்றன்
உருவெளித் தோற்றத் தோடு!
எத்தனை நாட்கள் ஈதை
எண்ணியும் பார்த்து விட்டேன்
புத்திரன் ஏனோ என்னைப்
போலுளன் அறியேன் ஏது!

தான்பெற்ற குழவி, தன்போல்
தனித்துவம் விளங்கா நின்றும்
நான்தந்தைஎன்று மட்டும்
நாளெலாம் உரைத்தாய் நண்பா!
ஏன் பெற்றாய்? விபச்சாரத்தால்
எய்திய ஒன்றை வைத்து
வீண்புகழ் வேண்டாம் உன்றன்
வித்துவம் விழலே; ஓடு!

## வந்த வழி

'துந்துமிகள்' சந்தஒலி சிந்துநடை மாளும்
முந்தையர்கள் வந்தவழி கண்டுஅணி யாப்பு
சிந்தனைகை வந்தவர்கள் செய்தகவி வாழும்
அந்தவழி சென்றினிய செந்தமிழ் வளர்ப்போம்

**தமிழ்:**

கற்பனையைச் சொற்களிடை காட்டிஉயிர் ஊட்டிஎழில்
அற்புதமே செய்பவனு நீயும்?
நற்புலவ நின்கவிதை எப்படியோ? நான்மகிழச்
செப்பிடுக! தேன்செவியில் பாய்க!

**புதுமை வாணன்:**

வந்தனம் தாயே!
வரகவி அன்று நான்
முந்தையர் பாக்கள் போல
மோனை, எதுகை அணிச்சிலம்பம்— கை

**தமிழ்:**

வந்ததா உனக்கும்?

**புதுமை வாணன்:**

சீச்சீ...
வரவில்லை அதனுல் தானே...
அதற்கு நாங்கள்
'நவகவி' எனப்பெயர் வைத்தோம்!
ஒன்றுசொல் கின்றேன்
ஒழுகிடும் 'ரிதும்' என் இன்பம்
இன்றிங்கு புதுமையான
இலக்கியம் தோன்றலாகும்!

**தமிழ்:**

என்றுதான் எண்ணுகின்றேன்

**புதுமை வாணன்:**

இதோ......புதுக்கவிதை

## ஊமை இரகசியம்

ஊரெல்லாம் அமர்க்களம்
கணபதிக்குத் திருமணமாம்!
மேளம் ஒலிபெருக்கி மேட்டிமைகள்
வாணவேடிக்கை
சிலம்படி தீப்பந்த விளையாட்டு
சங்கீதக் கச்சேரி
சதிராட்டம் கோலாட்டம்
எல்லாம் நடாத்துதற்கு
ஏற்பாடு
மாப்பிள்ளை வீட்டார்கள்
பணக்காரர் ஆகையினல்
பெண்வீட்டார் கூடப்
பெரிதாய்க் கடன்பட்டார்
கொண்டாட்டம்
ஏழுநாள் மட்டும் நடக்கும்!

இதுபற்றி யெல்லாம்
அடுத்த வீட்டு
ஊமைப் பெண் அழகிக்கு
கவலையெதும் கிடையாது.

விடிய ஒருமணிக்கு
கலியாண விருந்தெல்லாம்
தட புடலாய் நடக்கும்
அப்போது போனலே போதும்
அவளுக்கு!

மறந்திருக்க மாட்டார்
இதற்குள்—ஒருநாள் இரவுவந்து
செத்தைக் கதவைத் திறந்து
கரத்தை நகத்தாற் சுரண்டி
கைப்பாஷை காட்டி
கருக்கிருட்டில் கூட்டிப் போய்

பாவைக் கொடிக்கு நட்ட
பரட்டை மிலாறுதனில்
விதைக் கென்று விட்டிருந்த
பழத்தை விரலால் நெருடி—பிளந்து
பசிக் கருந்தி—தாகத்தை
கைக்கெட்டும் தூரத்தில்
காய்த்துக் குலைகுலையாக
தொங்குகிற தென்னைவிட்டு
சற்றே மிதந்து
சரிந்த தெங்கின் மீதேறி
பன்னாடை தன்னைப்
பறபறென்று பிய்த்து – அதன்
குருத்தைத் தடவி, முகிழ்
கழற்றாமல் இளநீர்க் காய்
பறித்துக் குடித்திட்ட கள்ளர்
பிள்ளை யில்லா ஊமையென
மற்றவர்கள் பேசாமல்
என்னிடையில் – குத்து
விளக்கேற்றி வைத்த அவர்
தன்மகனைக் கண்டு தருக்குற்று
அள்ளி அள்ளிச்
சோறு—பணியாரம் எல்லாம்
கொடுப்பார்—மிகநல்லவர் பாவம்!

மூலைக்குள் படுத்திருக்கும்
அழகிக்கு இது தெரியும்!
நேற்றுத்தன் மகனோடும்
வீட்டுக்கு வந்திருந்தாள்;
'என்னடி அழகி! சுகமா?
மிகவும் இளைத்துப் போனாய்''—என்று
வழமைபோல் விசாரித்தேன்

அவளோ...
அம்மா அருகில் போய்
சும்மா அமர்ந்து கொண்டாள்
ஏனோ அவள் மகன்

அப்பாவின் கல்யாண
நாதஸ்வரக் கச்சேரி
நடப்பதற்கு முன்னேயே
ஒத்தூதத் தொடங்கிவிட்டான்!

அம்மா இதன் பொருளை அறிவாள்
அவன் கையில்
'சீனிரொட்டி' கொண்டுவைத்தாள்
சிரித்தபடி,
அதற்கு அவன் சும்மா இருப்பானா?
சுதி கிளம்பி விட்டது! தன்
பொக்கை வாய்ப் புன்னகையால்
அம்மாவின்
உதிராத பற்களுக்கு
''நக்கல்'' அடிக்கின்றான்

நறுக்' கென்று கன்னத்தை
கிள்ளி அவனுடைய
கிறுக்கை அடக்கிவிட்டு,
''ஏண்டி அழகி
இவன் அப்பன் எதிர்வீட்டுக்
கணபதிக்கு நாளை
கலியாண மாமே?
இதுபற்றி உனக் கொன்றும்
அறிவித்தல் கிடையாதோ''
என்று அன்னை கேட்டாள்

அழகி அதற்கு
முகத்தைச் சுளித்து
நாணுதவள் போல நாணி
உடம்பை வளைத்தாள்,
அந்தியில் மேற்கு வானமாய்
அவள் முகம்
ஒரே ஒரு கணம்
சிவந்து மாறிச் சிரித்து ஓய்ந்தது.

மகனை எடுத்து மார்போடணைத்து
உச்சி மோந்து உறுஞ்சினுள் இதழை;
''இச்'' சென்ற ஓசையும்
எழுந்து தொடர்ந்தது!

தமிழ்:

தமிழின் கவிதைக்
கலையின் மகிமை
தனைநீ அறியாய்; அதனுல்
அமிர்தப் பொருளைக்
கொலைசெய் தனைசீ!
அதனுல் புகழா அடைவாய்?

களையின் தொளைநான்;
வளிநீ; நுழையின்
விளையும் கவியின் பொலிவே
வழியின் பழமை
அறியா திருளில்
நுழையின் வருமோ நவமே?

ஒருநாள் இதைநீ
உணர்வாய்; அழுவாய்
உணர்வின் பிடியுள் உழல்வாய்
மறுகால் எனையுன்
மனதாற் செயலால்
மகனே நிதமும் தொழுவாய்!

சிற்றிடையைச் சுற்றிமுலை
பற்றிஇதழ் ஒற்றி, கவி
வெற்றி கொளச் சற்றுமிலை
வீரம்—எங்கோ
முற்றுமுன தாண்மையெலாம்
மற்றொருபெண் ஆசைவெறி
முற்றியதால் போனதுவோ சோரம்?

பண்டை வழி கண்டுபொருள்
கொண்டகரு வொன்றினிலே
நின்றெழுதல் வேண்டும் உயர்
பாட்டு—வெறும்
சண்டைவழி சென்று'தமிழ்த்
தொண்டு'செயத் தேவையில்லை
நன்றுமகி ழாதுசெவி கேட்டு.

'அறவழிப்புலவன்' சொன்ன
அருங்கவி கேட்டு நெஞ்சம்
உருகிய தெல்லாம் பாவம்
உன்கவி கேட்டு நொந்தேன்
அருகில் வா 'புதுமை வாணு'
அதுவெறும் வசனக் கோவை
பெருமையா இதனுல் சேரும்
பின்னென்ன கவிதை வேண்டும்?

தவப்பயனுல் அவதரித்துத்தமிழென்னைக்
காத்துவந்த தகைமை யாளர்
அவர்க்குநிகர் அவரான அகத்தியனும்
முரஞ்சிமுடி நாக ராயன்
நவமணிபொன் சூட்டியதெல் காப்பியன்மற்
றவனுடனே வள்ளுர் காப்யன்
கபிலனெடு பரணன்நக் கீரனெனும்
என்காதல் கவிதை வேந்தர்.

கேட்டிருந்தால் உன்தலையைக் கிள்ளிஎறிந்
திருப்பார்கள் கிணற்றுக் குள்ளே!
வாட்டமுற்றே மடித்திருப்பார் வள்ளுவனும்
இளங்கோவும் சாத்தனுரும்,
பாட்டினிலே பண்ணமைத்து பாடிவைத்த
ஆழ்வார்கள் பார்த்திருந்தால்
ஏட்டினையே பொசுக்கியதில் எழுந்தீயில்
தம்முடலை எரித்துக் கொள்வார்!

கம்பனில்லை; புகழேந்தி, கவியொட்டக்
கூத்தனில்லை; வில்லி இல்லை.
எம்புமிசைப் பரணிக்கோர் செயங்கொண்டான்,
அருணகிரி, காளமேகம்
தம்பியண்ண ராயிருந்து தமிழ்பாடும்
இரட்டையர்கள் தாயுமானர்
இம்மையிலும் மறுமையின்பம் எடுத்தோதும்
இராமலிங்க அடிகள் இல்லை,

இவரெல்லாம் என்னருகே இருந்திருந்தால்
இப்படியோர் "வசனக்கட்டை"
சுவையான கவிதையெனச் சோடித்துப்
'புதுமை'யெனச் சொல்லு வாயோ
அவரில்லை; ஆனாலும் பழமையிலே
புதுமைவழி அமைத்துத் தந்து
சிவயோகம் சேர்ந்தஎன்றன் செல்வமகன்
பாரதியின் செவியில் பட்டால்...

இன்னுமொரு முறையிதற்காய் இறந்திருப்பான்
'பொலிடோலை' எதையுமுண்டு!
என்னதவம் புரிந்தனையோ இதையெல்லாம்
காணமல் இருக்கும் வண்ணம்!
அன்னையென்மேல் உனக்கேதும் அன்பிருந்தால்
கவிதையினிச் சமைத்தல் விட்டு
சின்னதுவாய் கதையெனினும் 'சீரியலா'ய்
'நவலெ'தும்போய் சிருஷ்டி செய்க!

*1962*

314

# நீலாவணன்

கவிஞர் நீலாவணனின் இயற் பெயர் கே. சின்னத்துரை. ஊராரும், உறவினரும் அவரை நடராசா என்றே அழைப்பர். ஆயினும் தனது பிறந்த ஊரான பெரிய நீலாவணையின் மீதுள்ள பற்றுக் காரணமாக அவர் தனக்குச் சூடிக் கொண்ட புனைபெயர் நீலாவணன். நீலா-சின்னத்துரை, [illegible]மாச்சி ஆறுமுகம், கொழுவு துறட்டி, வேதாந்தி முதலியன அவரது பிற புனை பெயர்களுள் சில.

31-6-1931ம் ஆண்டு பிறந்த நீலாவணனின் தகப்பனார் பழந் தமிழ் இலக்கிய ஆர்வலரான கேசகப்பிள்ளை வைத்தியர். தாயார் பெயர் தங்கம்மா. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்த நீலாவணன் தமிழாசிரியை அழகேஸ்வரியை அன்பு மனைவியாகக் கொண்டார். வேந்தன், வினோதன், எழிலரசி, ஊர்மிளா, கௌரி ஆகியோர் இவரது மக்கட் செல்வங்கள்.

1952ல் 'பிராயச்சித்தம்' சிறுகதை வாயிலாக இலக்கிய உலகுக்கு வந்த நீலாவணன் 1953ல் 'ஓடிவருவதென்னேரமோ?' என்ற கவிதையின் மூலம் கவிஞராக அறிமுகமானார். அதுமுதல் இறுதி மூச்சுவரை பன்னூற்றுக் கணக்கான கவிதைகள் மூலம் தமிழை அணி செய்தார். உருவகக்கதை, சிறுகதை, விருத்தாந்த சித்திரம், நாடகம், கட்டுரை முதலிய பல் துறைகளும் கை வந்த நீலாவணன் கவிஞராகவே புகழ் பூத்தார். 11-1-1975ல் இயற்கை எய்திய கவிஞரின் இறுதிக் கவிதை 'பொய்மை பொசுங்கிற்று' என்பதாகும்.

கல்முனை எழுத்தாளர் சங்கத்தின் தாபகராகவும் தலைவராகவும் அவராற்றிய பணி மகத்தானது. இரண்டிதழ்களே வெளிவந்த 'பாடும் மீன்' இவரது இலட்சியக் கனவின் வெளிப்[illegible] கிழக்கிலங்கையின் தலை மகனாகிய நீலாவணன் தமிழ்க் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு கணிசமானது.

மருதூர்க்கொத்தன்

ரெயின்போ பிரிண்டர்ஸ், கொழும்பு-13.